

இரு வேறு துருவங்களான தமிழரசுக் கட்சியும் தமிழ்க் கட்சிகளின் கூட்டணியும்: ஒன்றிணைவு சாத்தியமாகுமா?
செல்வழுகன்
பக்கம்
05

பக்கங்கள்: 16
விலை: 30.00
THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை
தீ : 01 புனல்:29 13.11.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



பங்காளிகள்
சண்டையும் பரிதவிக்கும் பொருளாதாரமும்!
அவதானி
பக்கம்
06





சி.அ.யோதிலிங்கம்.

# 13 ஆவது திருத்தம் அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியா?

இந்திய வெளியுறவுச் செயலரின் வேண்டுகோளுக்கிணங்க 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கூட்டாக கோரும் முகமாக தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. கடந்த 2 ஆம் திகதி யாழ்ப் பாணம் திருநெல்வேலி திண்ணை விடுதியில் இடம்பெற்ற இவ் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அழைப்பின்பேரில் தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கலந்துகொண்டன.

இக்கட்சிகளின் சார்பில் அதன் தலைவர்க ளான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த் தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, ரவூப்ஹக்கீம், மனோகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் மக்கள் கூட்ட ணியின் தலைவர் விக்னேஸ்வரன் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவரின் சார்பில் கட்சியின் பொருளாளர் பேராசிரியர் சிவ நாதன் கலந்து கொண்டார்.

பிரதான தமிழ்த்தேசியக்கட்சிகளான அகில இலங்கை தமிழரசுக்கட்சியும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் இதில் கலந்து கொள்ள வில்லை. விக்கினேஸ்வரனின் கூட்டணி யிலுள்ள அனந்தி சசிதரனின் ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகமும் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளாதது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். அக்கட்சி வெளிப்படையாகவே 13 ஆவது திருத்தம், அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்க மாட்டாது எனக் கூறி வருகின்றது. ஆனால் 13 ஆவது திருத்தம் அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாக இருக்கும். அது முழுமையாக நிறைவேற்றப் படல் வேண்டும் எனக்கூறிவரும் தமிழர சுக்கட்சி இதில் கலந்து கொள்ளாததுதான் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அனந்தி தான் ஒரு தளபதியின் துணைவியாக இருந்து கொண்டு 13 ஆவது திருத்தத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

ரெலோ ஒழுங்கு செய்த கூட்டத் தில் மூத்தகட்சியான தமிழரசுக்கட்சி எவ்வாறு கலந்து கொள்வது என்ற ஈகோப் பிரச்சினை அதற்கு காரணமாக இருக்கலாம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமை கலந்து கொள்ள வேண்டாம் என, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கேட்டதாகவும் ஒரு தகவல் வந்திருக்கின்றது. இந்தியா பெரிதாக எதுவும் செய்யப் போவதில்லை இந்தியாவை நம்பி ஆட்சியாளர்களைப் பகைப்பது ஆரோக்கியமற்றது என சம்பந்தன் கருதியிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

ஆலோசனைக் கூட்டம் முடிவுற்று சில நாட்களின் பின்னர் மனோகணேசனும் ரவூப்ஹக்கீமும் சம்பந்தனைச் சந்தித்து எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் கூட்டங்களில் தமிழரசுக் கட்சியும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூட்டங்களுக்கு சம்பந்தன் ஐயாவே தலைமை தாங்க வேண் டும் என்றும் கேட்டுக்கொண்டனர். சம்பந்த னும் அதற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி 13 ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பப்புள்ளியாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் தீர்வு இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் சுயநிர் ணயமுடைய சமஸ்டியாக இருக்க வேண்டும் என்று சாரப்பட ஒரு அறிக்கையை கூட்டத்தில் சமர்ப்பித்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. பேராசிரியர் சிவநாதனை கூட்டத்தின் இடையில் வெளியேறுங்கள் என புலம் பெயர் நாட்டில் இருந்து கோரப்பட் டதாவும் இன்னோர் செய்தி உள்ளது.

கூட்டத்தின் முடிவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தலைமையில் ஊடக வியலாளர் மாநாடு இடம் பெற்றது. அதில் அவர் கூட்டத்தின் தீர்மானங்களை அறிவித் தார். அரசியல் யாப்பில் இருக்கும். 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படல் வேண்டும், மாகாண சபைத் தேர்தல்கள் விரைவாக நடாத்தப்படல் வேண்டும். அரசாங்கத்தால் வடக்கு-கிழக்கு மாகா ணங்களில் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அனை வரும் விடுதலை செய்யப்படல் வேண்டும், “ஒரே நாடு ஒரே சட்டம்” என்பதை நிராகரிக்கின்றோம் என்பன தீர்மானங்களாக அமைந்திருந்தன.

13 ஆவது திருத்தத்திற்கு ஒருங்கிணைத்து குரல்

▶15

# சீனாவின் மென் அதிகார முகத்தை சிதைக்கும் பென்டகனின் அறிக்கை!



ஐ.வி.மகாசேனன்

அமெரிக்கா எதிர் சீனா என்ற அதிகாரப் போட்டியை மையப்படுத்தியதாகவே நடப்பு சர்வதேச செய்திகள் யாவும் சுழல்கின்றது. இந்த வரிசையில் நவம்பர் முதல் வாரங்களில் அமெரிக்காவின் பாதுகாப்புப் பிரிவாகிய பென்டகன் சர்வதேச அரசியல் பரப்பில் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்கா காங்கிரஸில் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பென்டகனின் அறிக்கை மீது சீனா தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. இது வர்த்தகப்போரில் ஈடுபட்டு வந்த அமெரிக்கா எதிர் சீனா அதிகாரப்போட்டியில் பலப்பரீட்சைக்கான களத்தை உருவாக்குகின்றதா? என்ற சந்தேகத்தை சர்வதேச அரசியல் ஆய்வாளர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இக்கட்டுரை சீனாவின் இராணுவ செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கப் பாதுகாப்புத்துறை காங்கிரஸில் சமர்ப்பித்துள்ள அறிக்கையையும் அது சர்வதேச அரசியலில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும், அமெரிக்காவின் பென்டகன் அதன் பிரதான எதிர்த்தரப்பாகிய சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் (பி.எல்.ஏ) முன்னேற்றங்களைப் பற்றி விவாதித்து ஓர் அறிக்கையை வெளியிட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டு அறிக்கை, கடந்த ஆண்டை விட இரண்டு மாதங்கள் தாமதமானது. ஆனால் குறித்த அறிக்கை சீனாவின் இராணுவத்தைப் பற்றிய சிந்தனையைத் தூண்டும் சுருக்கங்கள் நிறைந்ததாக இருப்பதால் காத் திருக்க வேண்டியது அவசியம் என்பது சர்வதேச அரசியல் தரப்பின் கருத்தாடலாகக் காணப்படுகிறது. அமெரிக்கக் கடற்படைப் போர்க்கல்லூரியின் வியூகப் பேராசிரியர் ஆண்ட்ரூ எரிக்சன் சர்வதேச ஆசியச் செய்தித்தளத்துக்கு (ANI) வழங்கிய நேர்காணலில், “கடந்த இரண்டு தசாப்தங்களாக சீனாவின் மக்கள் விடுதலை இராணுவமானது அமைப்பு, ஒருங்கிணைப்பு, நுட்பம் மற்றும் பயிற்சி ஆகியவற்றில் நிலவும் பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான வியத்தகு சீர்திருத்தங்களுடன் கூடிய வேகமான வன்பொருள் உருவாக்கம் அளவு மற்றும் அதிகரிக்கும் தரத்தை அடைந்துள்ளது. சீனா ஏற்கெனவே ஒரு பெரிய சக்தியாக வந்துவிட்டது. இது உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம், பாதுகாப்பு பட்ஜெட் மற்றும் உலகின் மிகப்பெரிய நிலையான தரைப்படை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அதன் மூன்று கடல் படைகளில் (கடற்படை, கடலோரக் காவல் படை மற்றும் கடல் போராளிகள்) ஒவ்வொன்றும் உலகில் அதிக எண்ணிக்கையிலான கப்பல்களினை கொண்டுள்ளது. இது இந்தோபசிபிக்கின் மிகப்பெரிய விமானப்படையையும், உலகின் மிகப் பெரிய துணை-மூலோபாய ஏவுகணைப் படையையும், விவாதிக்கக்கூடிய உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் அதிநவீன தரையிலிருந்து அனுப்பும் வான் ஏவுகணைப் படையையும் கொண்டுள்ளது.” என உலக அரசியலில் சீனாவின் இராணுவ முக்கியத்துவத்தை விவரித்தார்.

சீன மக்கள் குடியரசை உள்ளடக்கிய இராணுவ மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள்-2021 அல்லது சுருக்கமாக சீனாவின் இராணுவ அதிகார அறிக்கை (CMPR) என அழைக்கப்படும். சீன இராணுவம் தொடர்பான பென்டகன் அறிக்கை 192 பக்க ஆவணமாக நவம்பர்- 3 (2021)அன்று வெளியிடப்பட்டது. குறித்த அறிக்கையானது 2020 இறுதி வரையிலான முன்னேற்றங்களை மட்டுமே உள்ளடக்கியது. இது ஒரு வருடத்திற்கு முந்தைய சிறந்த பகுதியாகும். இவ்வருடத்தின் அண்மைய சீனாவின் இராணுவ ஆயுதப் பரிசோதனைகள் பற்றிய தகவலை முந்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் அறிக்கை ஆரம்பத்திலேயே, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் வளர்ந்து வரும் திறன்கள் மற்றும் கருத்துக்கள், ‘பலமான எதிரிக்கு’ எதிராகப் போரிட்டு வெற்றிபெறும் சீனாவின் திறனைத் தொடர்ந்து வலுப்படுத்துகின்றன என்ற எச்சரிக்கையைக் குறிப்பிட்டுள்ளது. மேலும், பிராந்திய தகராறுகளில் தைவான் மற்றும் போட்டி உரிமைகோருபவர்களை வற்புறுத்தவும், சீனாவின் சுற்றளவில் ஒரு மோதலில் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டை எதிர்க் கவும் மற்றும் உலகளவில் அதிகாரத்தைத் திட்டமிடவும் சீன மக்கள் விடுதலை இராணுவம் உயரளவில் வலுப்பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் அறிக்கைக்கு சீனா தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. சீன தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மூத்த கர்னல் வுகியான் நவம்பர்-5 (2021)அன்று தனது அரசாங்கம் “அதிக அதிருப்தியில் உள்ளது மற்றும் உறுதியாக எதிர்க்கிறது” என்று கூறினார். மேலும், “அது உண்மைகளைப் புறக்கணித்தது மற்றும் பாரபட்சம் நிறைந்தது. சீனாவின் தேசிய பாதுகாப்புக் கொள்கை மற்றும் இராணுவ மூலோபாயம் குறித்து தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. சீன இராணுவ அச்சுறுத்தல் என்று அழைக்கப்படுவது புனையப்பட்டது” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

> “சீனாவின் அபரிமித வளர்ச்சி என்பது பொருளாதார ரீதியாக கட்டமைக்கப்பட்டதாக காணப் படுகின்றது. இவ் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கு சீனாவின் மென் அதிகாரமே காரணமாய் அமைந்துள்ளது. இந்நிலையில் சீனாவின் வளர்ச்சியை தடுக்கவே அமெரிக்கா சீனாவின் மென் அதிகார முகத்தை சிதைக்கும் வகையில் வன் அதிகார தோற்றப்பாட்டை உருவாக்குகிறதா என்பதுவும் சர்வதேச அரசியல் உரையாடலை அதிகரித்துள்ளது.”

பென்டகனின் சீனாவின் இராணுவ அதிகாரம் தொடர்பான அறிக்கை நேரடியாக சீனாவின் வளர்ந்துவரும் இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சியை வெளிப்படுத்துவதுடன், உலகிற்கு ஒரு அபாயச் செய்தியை வெளிப்படுத்துகின்றது. எனினும் இதில் புதைந்துள்ள அமெரிக்காவின் அரசியல் நலனை நுணுக்கமாக அவதானிக்க வேண்டியுள்ளது.

ஒன்று, அணுவாயுத அதிகரிப்புத் தொடர்பாக குறிப்பிட்டு சீனாவை உலக ஒழுங்கில் தனிமைப்படுத்த அமெரிக்கா முயலுகின்றதா? என்ற சந்தேகம் அமெரிக்காவின் கடந்த கால அரசியல் செயற்பாடுகளால் உருவாகுகிறது. பென்டகனின் அறிக்கை அதிகம் சீனாவின் அணு ஆயுதக்கிடங்கை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. பென்டகனின் 2020 ஆம் ஆண்டு அறிக்கை சீனாவின் அணு ஆயுதங்கள் இரட்டிப்பாகும் என்று எச்சரித்திருந்தது. ஆனால் 2021 ஆம் ஆண்டு முடிவுகள் மிகவும் நிதானத்தைக் குறைக்கின்றன. 2030 ஆம் ஆண்டிற்குள் சீனா தனது அணு ஆயுதங்களை 1,000 ஆயுதங்களாக நான்கு மடங்காக உயர்த்தும் என்று உறுதியளிக்கிறது. மேலும், 2020 ஆம் ஆண்டு அறிக்கை சீனா அணுசக்தி முக்கோணத்தை ‘தொடர்கிறது’ என்று குறிப்பிட்ட நிலையில், இந்த ஆண்டு அது ‘ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கலாம்’ என்று மாற்றியுள்ளது. சர்வதேச ரீதியாக அணுவாயுதம் தொடர்பான அச்சம் காரணமாக அதன் பயன்பாடு தொடர்பாக சர்வதேச சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே சீனா அதிவேகமாக அணுவாயுதங்களை அதிகரிப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுவதனூடாக சர்வதேச ரீதியாக சீனாவைத் தனிமைப்படுத்த அமெரிக்கா முயலுகின்றதா? என்ற எண்ணம் உருவாக்கம் பெறுகிறது. முன்னைய காலங்களில் ஈராக்கில் சதாம் ஹிசைனுக்கு எதிரான போருக்கும் அணுவாயுத அதிகரிப்பையே பிரச்சாரமாக முன்னெடுத்திருந்தது. அவ்வாறே வடகொரியாவை சர்வதேச வெளியில் தனிமைப்படுத்தவும் இன்றளவும் அமெரிக்கா அணுவாயுத அதிகரிப்புப் பிரச்சாரத்தையே முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது, சீனாவின் அபரிமித வளர்ச்சி என்பது பொருளாதார ரீதியாக கட்டமைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இப்பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கு சீனாவின் மென் அதிகாரமே காரணமாய் அமைந்துள்ளது. இந்நிலையில் சீனாவின் வளர்ச்சியை தடுக்கவே அமெரிக்கா சீனாவின் மென் அதிகாரத் முகத்தைச் சிதைக்கும் வகையில் வன் அதிகாரத் தோற்றப்பாட்டை உருவாக்குகிறதா? என்பதுவும் சர்வதேச அரசியல் உரையாடலை அதிகரித்துள்ளது. சீனாவின் மென் அதிகாரம் என்பது பொருளாதார முதலீட்டாளர்களுக்கு அதிக பாதுகாப்பு உத்தரவாதத்தை கொடுக்கக்கூடியதாகும். அதனடிப்படையிலேயே அமெரிக்கா பங்காளியான ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவுடன் இணைந்து சீனாவை எதிர்க்க தயாரில்லாது சீனாவுடன் பொருளாதார உறவை வளர்த்து வருகின்றனர். இவ் முதலீட்டு பாதுகாப்பு நம்பிக்கையை சிதைப்பதற்கான முயற்சியாகவே சீனாவின் வன் அதிகாரத் தோற்றப்பாட்டை அமெரிக்கா முதன்மை பிரச்சாரமாக களமிறக்கியுள்ளது.

மூன்றாவது, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள சீனா நட்பு நாடுகளிடையே அச்சத்தை உருவாக்கி அந்த நாடுகளின் சீன உறவை பலவீனப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா களமிறங்கியுள்ளது. நாடுகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மையப்படுத்திய சீனாவின் வர்த்தகப்பாதை திட்டமாகிய பட்டி மற்றும் சாலை முன்முயற்சி நகர்வுகளின் போது சீனா சிக்கலான கடன் பொறிமுறை மூலமாக நாடுகளை சூறையாடுவதாகப் பிரச்சாரத்தை முன்னெடுத்திருந்தது. எனினும் அது அமெரிக்கா எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. பல ஆசிய, ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளும் சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சியின் பங்காளிகளாக இணைந்துள்ளனர். இந்நிலையில், தற்போது சீனா தனது நட்பு நாடுகளின் துறைமுகங்களில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இராணுவத்தளங்களை உருவாக்கத் திட்டமிடுவதாக பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில் கம்போடியா, மியான்மர், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, பாகிஸ்தான், இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கென்யா, சீஷெல்ஸ், தான்சானியா, அங்கோலா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை அறிக்கை அடையாளப்படுத்தியுள்ளது. இதற்கு இலங்கையின் சீனா தூதரகம் கடுமையான சொல்லாடல்கள் மூலமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. “திருடன் ஒருவன் அனைவரும் திருடுவார்கள் என்றே நம்புகின்றார்கள்” எனத்தெரிவித்துள்ளது.

எனவே, சீனாவின் இராணுவ வளர்ச்சி தொடர்பான பென்டகனின் அறிக்கை என்பது சீனாவின் மென் அதிகார முகத்திற்கு எதிரான பிரச்சாரமாகவே அமைகின்றது. சீனாவின் இராணுவ வளர்ச்சி என்பது மறுதலிக்க முடியாததாக அமைகின்ற போதிலும், சீனா தொடர்பாக எச்சரிக்கும் செயற்பாடுகளை அமெரிக்கா நீண்டகாலமாகவே முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எவ்வித நிலத்தொடர்ச்சியுமற்ற இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்கா ஏறத்தாழ ஐந்து இராணுவத்தளங்களை நேரடியாக கொண்டுள்ளது. டியோ கார்சியாவில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தளத்தை அமெரிக்கா பேணி வருகிறது. 2021 ஆம் ஆண்டு சீனாவின் இராணுவ வளர்ச்சி தொடர்பான பென்டகன் அறிக்கை, இந்தோ-பசிபிக் மற்றும் அதற்கு அப்பால் உள்ள அமெரிக்க நலன்களுக்கு சீனா முன்வைக்கும் வளர்ந்து வரும் சவாலையே நிரூபிக்கிறது. இதனை அமெரிக்கா எதிர்கொள்ள அன்ட்ரூ எரிக்சன், “அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கூட்டாளிகளும் இந்த தசாப்தத்தில் நாம் ஏற்கனவே தெளிவாக நுழைந்துள்ள மிகப் பெரிய ஆபத்தின் மூலம் பாதிப்பின் சாளரத்தை எதிர்கொள்வதற்கு உடனடியாகத் தயாராக வேண்டும். இராணுவம் மற்றும் தகவல் தயாரிப்பு ஆகிய இரண்டும் அவசரமாகத் தேவை. நன்கு தயாரிக்கப்பட்ட மற்றும் நன்கு விளக்கப்பட்ட அமெரிக்க அரசாங்க பதில்கள் மட்டுமே திகைப்பூட்டும் தோல்வியின் சிதைவைத் தடுக்கும் மற்றும் ஷி ஜின் பிங் போராடாமல் வெற்றி பெறுவதைத் தடுக்கும்.” எனத்தெரிவித்துள்ளார். இவ்வாறாக, அமெரிக்கா-சீனாவின் அதிகாரப் போட்டியில் இரு தரப்பினதும் இராணுவ வளர்ச்சியானது உலக அமைதியையே சீர்குலைக்கப் போகிறதா? அல்லது போரை தவிர்க்கப் போகிறதா? என்ற குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# ஆட்சியாளர்களின் அக்கறையே மக்களின் சுபீட்சமான வாழ்வைத் தீர்மானிக்கும்

இலங்கையில் தற்போதைய ஆட்சியாளர்களின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டதாக ஏதிர் கட்சியினர் கூச்சல் போடத் தொடங்கியிருக்கின்றனர். நாட்டில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்ததனைத் தொடர்ந்து அரசாங்கம் எதிர் கொண்ட இடர்காரணமாகவும், அத்தகைய தருணத்தில் அரசாங்கத்தால் புத்திபூர்வமான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடி வந்ததன் காரணமாகவும் நாட்டில் பல்வேறு பட்ட அசம்பாவித நிலைமைகள் ஏற்பட்டுவிட்டது என்பதனைக் கொண்டே எதிர்க் கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிராக இத்தகைய விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். ஆனாலும் ஆட்சியாளர்கள் அப்படி எதுவும் நடக்காதது போலவே தமது செயற்பாடுகளையும் தமது அறிக்கைகளையும் முன்வைத்து வருகின்றனர். விழுந்தவனின் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல அவர்களின் செயற்பாடு இருப்பதாக சுருக்கமாகக் குறிப்பிட்டு விளக்கமுடியும்.

நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் இலங்கையில் எவ்வகையில் இனி தமது அன்றாட வாழ்க்கையினை நகர்த்திச் செல்வது என்ற ஏக்கத்துடன் தனது அன்றாடச் சீவியத்தினை மிகவும் பிரயத்தனப்பட்டு முன்னகர்த்தி வருகின்றான். இன்று பொருட்களின் விலைகள் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகின்றது. இது இலங்கையில் வாழும் மக்களின் உளவியலைச் சிதைப்பதுடன் வாழ்தலுக்கான அச்சத்தினையும் ஏற்படுத்துகின்றது. இத்தகைய நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அவ்வாறு பொறுப்புணர்ந்து செயற்படுவதற்கான எந்த அறிகுறியும் தென்படுவதாக இல்லை. ஒருவகையில் பார்த்தால் இலங்கையைச் சர்வாதிகார ஆட்சிக்குட்படுத்தி ஆட்சிசெய்து வருவதில் அக்கறை கொண்டு செயற்படுவதாகவே தெரிகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டில் எது நடந்தாலும் யாரும் கேட்கக் கூடிய நிலையில் இல்லை. அது தமிழர்களுக்கான தீர்வாக இருந்தாலும் சரி, பொருட்களின் விலையேற்றமாக இருந்தாலும் சரி, புதிய நடைமுறைகள் அமுலுக்கு வருவதாக இருந்தாலும் சரி ஆட்சியில் உள்ளவர்களின் தனிப்பட்ட முடிவிலேயே நிகழ்த்தப்படுவதாக அறிய முடிகின்றது. இத்தகைய போக்கு எதிர்காலத்தில் இலங்கையை பாடுகுழியில் தள்ளிவிடும் ஆபத்து இருப்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அது உண்மையும் கூட. நடைமுறையில் ஆட்சியில் இருப்வர்களின் செயற்பாடு எதிர்காலத்தில் எவ்வகையானவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களையும் அவர்களின் ஆட்சிக்குக் கீழ் உள்ள மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பது கடந்த காலத்தில் ஆட்சி செய்து வந்த ஆட்சியாளர்களில் செயற்பாட்டுப் போக்கிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவே இருந்திருக்கின்றது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கையை ஆட்சி செய்யக் கூடிய சிங்கள அதிகாரத்தரப்பு யாராக இருந்தாலும் நாட்டினை வளப்படுத்தும் எண்ணமோ, அபிவிருத்தியை நோக்கி முன்னகர்த்தும் எண்ணமோ இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் ரணில் விக்கிரமசிங்க நாட்டினை முன்னோக்கி நகர்த்துவதற்கான திட்டம் தன்னிடம் உள்ளது என்று சொல்லிக் கொண்டு வந்தார். அவராலும் முடியவில்லை. பின் மைத்திரிபால சிறிசேன வந்தார். அவராலும் முடியவில்லை. மகிந்த ராஜபக்ஷ பல தடவைகள் சொல்லி நின்றார். அவராலும் முடியவில்லை.

உண்மையில் ஆட்சியிலிருப்பவர்கள் தமது சொந்த நலனை பின்தள்ளி நாட்டின் நலனை முன்னுக்கு வைக்கும் போதுதான் நாடும் மக்களும் வளச் செழிப்பு மிக்கதாக மாற்றமுறும். இதற்கு உலக நாட்டுத்தலைவர்கள் பலரும் முன்னுதாரணமாகச் செயற்பட்டு சாட்சியாக இருக்கின்றார்கள். அதற்கு ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமது அகத்தடைகளை களைந்த இதய சுத்தியுடன் செயற்படுவது தொடர்பில் சிந்திக்க வேண்டும், செயற்படவேண்டும். இங்கு நாட்டில் உள்ள அனைத்துக் குடிகளும் இந்நாட்டுக்குரியவர்கள் என்ற மனநிலை கொண்டு அவர்களுக்கான அனைத்து உரிமைகளையும் வழகுவதற்கு முன்வரவேண்டும்.

தென்னிலங்கை சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது மனதுள் ஆணியடித்து மாட்டப்பட்டிருக்கும் விடயம் இந் நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியது, மற்ற எல்லா இனத்தவரும் இந்நாட்டுக்குரியவர்கள் இல்லை. சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் எதிலும் அவர்களுக்கு பங்கு இல்லை அல்லது பங்கு எடுத்துக் கொள்ள முடியாது என்பதாகவே இருக்கின்றது. இத்தகைய மனநிலையில் மாற்றம் வரும் வரையில் நாட்டினை முன்னோக்கி நகர்த்தமுடியாது. இந்நாட்டில் வாழும் எல்லோரும் ஒருமித்தே நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்க வேண்டும். இலங்கைத் தீவில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவர்களுக்கு எண்ணற்ற பிரச்சினைகள் உண்டு. அத்தகைய பிரச்சினைகளை இதய சுத்தியுடன் தீர்ப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். உலகில் எத்தனையோ நாடுகள் பல்லின மக்களைக் கொண்டதாக இருக்கின்றன. அத்தகைய நாடுகள் எல்லா இனமக்களையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கான சுய கௌரவத்தினைப் பாதிக்காத வகையில் செயற்பாடுகளை முன்னிறுத்தி வருகின்றன. அதனால் அந்நாடுகள் இன்றுவரையில் உலகளவில் வல்லமை பொருந்தியதாக இருக்கின்றன. இத்தகைய அனுபவங்களை எடுத்துக் கொண்டு இலங்கை ஆட்சியாளர்கள் செயற்படுவது பொருத்தமானது. விடாப்பிடியாக நாங்கள் இப்படித்தான் செயற்படுவோம் என்று அடம்பிடிப்பது இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதனைப் புரிந்து கொள்வதில்தான் நாட்டின் வெற்றி தங்கியுள்ளது.

ஆட்சியாளர்களின் வெற்றியான நடத்தையில்தான் குடிகளின் வெற்றியும் சுபீட்சமான வாழ்வும் தங்கியுள்ளது என்பதனை தென்னிலங்கை சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மைத் தலைவர்களும் தமது நடத்தைகளை அவர்கள் உணரும்படியாக செயற்படவேண்டும். தமது மக்களுக்கான சுபீட்சத்தைப் பெற்றுக் கொடுப்பதில் சிறுபான்மை இனத்தலைவர்களுக்கும் பொறுப்பு உள்ளது என்ப தும் கருத்திலெக்கப்படவேண்டிது அவசியம். எதிர்காலத்தினை வடிவமைப்பதில் எல்லோருக்கும் பொறுப்புண்டு. பொறுப்புணர்ந்து செயற்படுவது பற்றி சிந்தித்தால் என்ன? ■

தந்திரன்



# மக்கள் வாழ்வைக் கருத்தில் கொள்ளாத அபிவிருத்தி பாடாய்ப்படுத்துகிறது

வங்காள விரிகுடாவின் தென் கிழக்குப் பகுதியில் குறைந்த தாழமுக்கப் பிரதேசம் உருவாகியதால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சூறாவளியுடன் கூடிய கனமழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் நாட்டின் பெரும்பகுதி நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர் என்பதனை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், பதுளை, புத்தளம், காலி, திருகோணமலை உள்ளிட்ட 13 மாவட்டங்கள் கனமழை காரணமாகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. பதுளை, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக, இதுவரை 20க்கு அதிகமானோர் பலியாகி உள்ளனர். மேலும் வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பலத்த சூறாவளிக் காற்று காரணமாக மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என, அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பலத்த மழை காரணமாக 17 மாவட்டங்களைச் சேர்ந்த 35000 க்கு அதிகமான பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையின் வடக்குக் கடற்கரை வழியாக தாழமுக்கம் தமிழகம் நோக்கி நகர்ந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதனால் கடற்பிரதேசங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

இலங்கை மக்கள் இன்று பல்வேறு அனர்த்தங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர். கொரோனாப் பெருந்தொற்று, டெங்கு, விலைவாசியேற்றம், தொழிற்சங்கப் போராட்டங்கள் என தொடர் சோதனைகளுக்கு உட்பட்டு வருகின்றனர்.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னர் மக்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முனைகையில் இப்பொழுது இயற்கை, மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைத்துள்ளது.

மீள் காடாக்கமின்றிக் காடுகளை வெட்டி, பொட்டல் வெளியாக்கி கட்டடங்கள் எழுப்பியதும், அதிகரித்த வாகனப் பாவனை, தொழிற்சாலை இயந்திரப் பாவனை என்பவையே காலநிலை சீர்கெடக் காரணம் ஆகும். காலம் தப்பிய மழைக்கும், காலத்தில் பெய்ய வேண்டிய மழையின் அளவினை விட அதிகளவான அல்லது குறைந்தளவான மழை வீழ்ச்சிக்கும் இதுவே காரணமாகிறது.

இவை ஒரு பக்கம் இருக்க, என்றுமில்லாதவாறு யாழ்ப்பாணம் வெள்ளக்காடாகிக் காணப்பட்டது. அபிவிருத்தி என்ற பெயரில் தரகுப் பணத்தினை நோக்காகக் கொண்டு எவ்வித பொறியியல் தொழில்நுட்பத்தினையோ வடிகாலமைப்புக்களையோ கருத்தில் கொள்ளாது பெருந்தெருக்கள், குறுக்கு வீதிகள் என பலதரப்பட்ட வீதிகள் அமைக்கபட்டுள்ளன.

மழை வெள்ளம் வழிந்தோட வழியின்றி வீடுகளுக்குள்ளேயே தேங்கி, பெருகி மக்களை இடம்பெயர வைத்துள்ளது. மக்கள் மீதான அக்கறை எனச் சொல்லி அரசாங்கம் தனது ஆதாயத்தினையே நோக்காகக் கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை கூட, அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடுகிறதே ஒழிய பெற்ற அறிவினை பிரயோகிக்கத் தவறி விட்டது. அதன் பிரதிபலன்களை எல்லோரும் அனுபவிக்கத் தொடங்கி விட்டோம்.

இன்னுமின்னும் வீதிகள் அகலிக்கப்படவும் புனரமைப்பு செய்யப்படவும் திட்டங்கள் காத்திருக்கின்றன. அதன் பொழுதாவது மக்கள் மீதான கரிசனையுடன், சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புடன் செயற்படும் வரை இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

படிமுறை வளர்ச்சியின் படி ஏற்பட வேண்டிய அபிவிருத்தியை குறுகிய காலத்தில் செய்து முடிப்பதானது உள்ளதையும் கெடுத்த கொள்ளிக் கண்ணன் கதை போலவே ஆகி விடும். ■


© செல்வின்

# இன்றைய சவால்களா? நாளைய கனவுகளா?

யுத்தம் சிதைத்த சமூகமும் சாம்பல் பூத்த நிலமும் என்று எவ்வளவு காலத்திற்கு நாங்கள் அழுதுகொண்டிருப்பது. எங்களின் பலங்கள், பலவீனங்கள் மட்டுமன்றி நாங்கள் ஆற்றவேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை எப்போது எங்கிருந்து ஆற்றத்தொடங்குவது என்பது எங்கள் முன் இன்று உள்ள முதன்மையான வினாக்களில் ஒன்றாக உள்ளது.

தொடர்ச்சியாக புலம்பெயர் சமூகத்தின் மனிதாபிமான உதவிகளையும் சர்வதேச உதவிவழங்கும் அமைப்புக்களின் வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் அரசாங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட நிவாரணத்திட்டங்களையும் சார்ந்து கொண்டு வாழத்தான் போகின்றோமா? இதனைத்தான் எங்களுடைய எதிர்கால சந்ததிக்காகவும் விட்டுச்செல்லப் போகின்றோமா?

இலங்கைத்தீவின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மிகமோசமான நிலையினை நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பொருளாதார அறிஞர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்றனர். இறக்குமதி செய்யப்படவேண்டிய அத்தியாவசிய உணவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கோ அல்லது துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பொருட்களை வெளியே கொண்டுவருவதற்கோ தேவையான அந்நிய செலாவணிக் கையிருப்பு இன்மையால் மிகவும் மோசமான உணவுப்பற்றாக்குறை தோன்றியுள்ளது.

பயறு மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றைச் சாப்பிடுங்கள் என ஒரு அமைச்சர் மக்களுக்கு ஆலோசனை கூறுகின்றார். மறுபக்கத்தில் இராசகுடும்பத்தின் மூன்று இளவல்களும் துபாய்நாட்டில் விளையாடவும் விளையாட்டினைப் பார்க்கவும் சென்றுள்ளனர் என்ற செய்திகளையும் பத்திரிகைகள் பதிவுசெய்துள்ளன.

விலைவாசி மிகவும் உச்சத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது வானமே எல்லையாக. அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக்கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டுவிட்டதாக அரச வர்த்தமானி பிரகடனம் செய்துள்ளது. சமையலுக்கான எரிவாயுவின் மிகவும் மோசமான தட்டுப்பாடு பெரும்பாலான மத்தியதர வர்க்கத்தினதும் நகரங்களிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் மாத்திரமன்றி கிராமங்களிலும் வாழும் குடும்பங்களினதும் நாளாந்த சமையல் கடமைகளைத் தடுமாறச்செய்துள்ளது. எரிவாயு பற்றாக்குறை நிலையில் அத்தியாவசிய சமையல்களைத் தொடர்வதற்காக குடும்பத்தலைவர்கள் மின்சார அடுப்பினையும் மண்ணெண்ணை அடுப்பினையும் வாங்குவதற்காக, கடைகடைகளாக ஏறி இறங்குகின்றனர். மறுபக்கத்தில் மின்சார விநியோகம் எதிர்பாராத நேரத்தில் துண்டிக்கப்படும் என மின்வாரிய தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சமையல் எரிவாயுக்கம்பனிகள் எரிகின்ற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற கோதாவில் விலைகளைத் தம்பாட்டிற்கு அரசின் அனுசரணையுடன் உயர்த்திச்செல்லும் அதேவேளை நாட்டில் நிலவும் எரிவாயுத்தட்டுப்பாட்டிற்கு நாட்டின் நுகர்வுச்சந்தைகளைக் கட்டுப்படுத்தும் மறைகரங்கள்தான் காரணமெனப் பத்திரிகை மகாநாடுகள் நடத்தப்படுகின்றன.

எங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் பசுமாடுகளிலிருந்து சிறிய அளவுகளில் கறக்கப்படும் பால் கூட ஒன்றுதிரட்டப்பட்டு பல பத்தாயிரம் லீற்றர்களாக இலட்சத்தை தாண்டியதாக நாளாந்தம் தேசியக் கம்பனிகளினால் தென்னிலங்கையில் உள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. நாங்கள், தேனீருக்கு பால்மாப்பொதி தட்டுப்பாடாக உள்ளது என்று கடைகளின் படிகளில் காத்திருக்கின்றோம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பதுபோல் வர்த்தக சமூகம் தனது அதிஉச்சஇலாப குறிக்கோளினை அடைவதில் உத்வேகம் கொண்டு செயற்படுகிறது.

கட்டிடங்கள் உயரத்தில் வானத்தை தொடாவிட்டாலும் கட்டுமானப் பொருட்களின் விலைகள் வானத்தைத் தொட்டுள்ளன. சந்தையில் பொருட்களின் கிடைப்புத்தன்மை குறைந்தால் (வழங்கல்) பொருட்களின் விலை அதிகரிக்கும் என்ற சந்தைப்பொறிமுறையின் பொருளாதாரச் சூத்திரம் நிதர்சனமாகியுள்ளது. இறக்குமதிப்பொருட்களின் வரவின்மையால் இருப்பில் உள்ள சரக்குகளின் விலைகளை உயர்த்துவதில் மொத்தவியாபாரிகள் முழுமையான இறைமை கொண்டவர்களாகத் தங்களை பிரகடனம் செய்துள்ளனர்.

சமையல் எரிவாயு விலை மட்டுமல்ல சமையல் எரிவாயுக்கொள்கலனின் விலையும் பத்தாயிரம் ரூபாய்களைத் தாண்டிவிட்டது. விறகு எரிக்கும் அடுப்படிகள் எல்லாம் காணாமல் போனதனால் கட்டாயமாக மேலதிகமாக ஒரு சமையல் எரிவாயுக்கொள்கலனை ஒவ்வொரு வீடும் வைத்திருக்கவேண்டும் என்ற தேவை கொள்கலனின் பற்றாக்குறையினையும் விலை உயர்வினையும் தூண்டி விட்டுள்ளது.

எங்கள் தேசத்தின் அதியுத்தம தலைவர் தன்னை மக்கள் தெரிந்தெடுத்தது அரிசியினதும் பருப்பினதும் பற்றாக்குறையினையும் விலை உயர்வினையும் பற்றிக் கவலைப்படவா எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

மற்றுமொரு இலத்திரனியல் பத்திரிகையில் தொடர்ச்சியாக இலங்கையின் பொருளாதாரம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவரும் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவரும் சமூகபொருளாதார ஆய்வாளருமான திரு.வரதராஜப்பெருமாள் தனது கட்டுரையில் “எழுந்து முன்னேற முடியா வகையில் இறுகிப் போயிருக்கும் இலங்கைப் பொருளாதாரம்” எனத் தலைப்பிட்டு ஆய்வு செய்து வருகின்றார். (https://arangamnews.com/?p=6718). எங்கள் எல்லோராலும் கட்டாயமாக வாசிக்கப்படவேண் டியது.



இப்பொழுது எங்களுக்கு புரியமுடிகின்றதா?

பூகோள சந்தையின் பல்தேசியக்கம்பனிகள் மட்டுமல்ல தேசிய கம்பனிகளும் அதற்கு மேலாக அதன் உள்ளூர் தரகர்களான வர்த்தகர்களும் எங்கள் வாழ்க்கையினைத் தங்கள் பணயப்பொருளாக மாற்றியுள்ளனர். நாங்கள் அரசியல் இறைமை பற்றிய கனவில் போராடிக் கெண்டிருக்க எங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வதற்கான உரிமையும் உணவுக்கான இறைமையும் தகர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை எதிர்கொள்ள நாம் உடனடியாகச் செயற்படவேண்டும்.

**“ எங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் பசுமாடுகளிலிருந்து சிறிய அளவுகளில் கறக்கப்படும் பால் கூட ஒன்றுதிரட்டப்பட்டு பலபத்தாயிரம் லீற்றர்களாக இலட்சத்தை தாண்டியதாக நாளாந்தம் தேசியக்கம்பனிகளினால் தென்னிலங்கையில் உள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. நாங்கள் தேனீருக்கு பால்மாப்பொதி தட்டுப்பாடாக உள்ளது என்று கடைகளின் படிகளில் காத்திருக்கின்றோம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதுபோல் வர்த்தக சமூகம் தனது அதிஉச்ச இலாப குறிக்கோளினை அடைவதில் உத்வேகம் கொண்டு செயற்படுகிறது. ”**

எங்கள் உயிர் வாழ்வுக்கான உணவினையும் நீரினையும் காற்றினையும் எங்கள் இறைமையின் உட்பொருட்களாக நாங்கள் உணர்ந்து பாதுகாக்கவேண்டும். இன, மத, குல அடையாளங்களுக்கும் அப்பால் சந்தைச்சுரண்டல்களால் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் எமது வாழ்வாதாரம் காப்பாற்றப்படவேண்டும். எங்கள் விவசாயிகள் தாங்கள் தோற்றுப் போய் விவசாயத்திலிருந்து வெளியேறும் அபாயத்தை இப்பொழுதே முன்னுணர்ந்து அவர்களைப் பேண்தகு வல்லமைகள் கொண்டவர்களாகத் தக்கவைக்க வேண்டும்.

போருக்குக் பின்னரான சூழ்நிலையில் 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் முதன்மையான விவசாய ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிறுவனமான கெக்ரர் கொப் பேக்கடுவ விவசாய ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிறுவனம் வடக்கு மாகாணத்தின் விவசாய சந்தைப்படுத்தல் தொடர்பான ஆய்வு மதிப்பீடொன்றைச் செய்திருந்தது. அதனை திரு.ரீ.ஏ.தர்மரட்னா என்ற ஆய்வாளர் மேற்கொண்டிருந்தார். சிறப்பான புலமையும் துறைசார் தொழில்வாண்மையும் கொண்ட ஆய்வாளரின் கட்டுரையில் வடபகுதியின் விவசாய சந்தைப்படுத்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான முன்மொழிவுகள் எமக்கு மிகவும் அவசியமானவைகளாகவும் எமது செயற்பாடுகளில் மாற்றத்தை வேண்டுவனவாகவும் உள்ளது. (http://www.harti.gov.lk/images/download/reasearch_report/new1/169.pdf)

அவருடைய ஆய்வு பலவிடயங்களை ஆழமாக அணுகியிருந்தாலும் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தல் தொடர்பாக அவ் அறிக்கை முன்மொழிந்த பத்து விடயங்களை நாம் எமது கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளது.

**முன்மொழிவுகள்:**

1. விவசாயத்திட்டமிடலில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான திட்டமிடலுக்கு உயர் முன்னுரிமை கொடுத்தல்.
2. விவசாய உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வேண்டிய உட்கட்டுமான வசதிகளின் அவசியத்தேவை.
3. பருவகால கிராமிய சந்தைகளை செயற்பாட்டிற்கு கொண்டுவருதல்.
4. பொருளாதார மையங்களை உருவாக்குதல்
5. சந்தை விரிவாக்கச் சேவைகளை அறிமுகப்படுத்துதல்
   - ஆலோசனை
   - உற்பத்தி திட்டமிடலில் இலத்திரனியல் தொடர்பாடல் முகாமைத்துவம்
   - சந்தைப்படுத்தல் தகவல்கள்
   - பாதுகாக்கப்பட்ட சந்தைப் பொறிமுறை
   - மாற்று சந்தைப்படுத்தல் வழிகள்
   - தரப்படுத்தல் மற்றும் பொதியிடல் போன்ற விடயங்களால் தரமுயர்த்தப்பட்ட சந்தைப்படுத்தல் முறைமைகள்
   - குழுவாக சந்தைப்படுத்துவதிலுள்ள அனுகூலங்களை கண்டறிதல்
6. பொருட்களை பொதியிடலில் முன்னேற்றகரமாக மாற்றங்களைக் கொண்டுவரல்
7. விவசாய உற்பத்திகளை களஞ்சியப் படுத்துவதற்கான வசதிகளின் அவசரத் தேவை.
8. விவசாயம் சார் கைத்தொழில்களின் அபிவிருத்தி
9. முதலீடுகளுக்கான கடனுதவிகள்
10. மக்களின் பங்குபற்றுதலுடனான அரச-தனியார் துறை முதலீடுகளும் முயற்சிகளும்.


2014 ஆம் ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட இந்த அறிக்கை ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருந்தாலும் ஆய்வு நிறுவனத்தின் நூலகத்திற்கு வெளியே எந்தளவிற்கு எங்கள் மாகாணக் கொள்கை வகுப்பாளர்களாலும் மாகாண மாவட்ட பிரதேச திட்டமிடலாளர்களாலும் வாசிக்கப்பட்டது என்பது அறியப்படவேண்டும். இவ்வறிக்கையின் சாராம்சம் மொழிபெயர்க்கப்பட்டு எங்களது விவசாயிகளுக்கும் விவசாயம்சார் தொழின்முனைவாளர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் உரிய துறைசார் தரப்புகளால் பகிரப்பட்டதா என்ற மில்லியன் ரூபாய் வினாவுக்கு விடைகாண வேண்டும்.

தொடர்ந்தும் “யானை பார்த்த குருடர்களாக” எவ்வளவு காலத்திற்குத்தான் சமூகத்தை வழிநடத்துவது அல்லது சமூகத்தின் பவிசு மிக்க பதவிகளிலும் அதிகாரக்கதிரைகளிலும் ஆக்கிரமித்திருப்பது. அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் அதிமேதாவிகளும் செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பில் எங்கள் சமூகப் பொறுப்பினை நாங்கள் உதாசீனம் செய்வது. ■

# இரு வேறு துருவங்களான தமிழரசுக் கட்சியும் தமிழ்க் கட்சிகளின் கூட்டணியும்: ஒன்றிணைவு சாத்தியமாகுமா?

செல்வழகன்

தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் தவிர்ந்த தமிழ்பேசும் கட்சிகள் ஒரே மேசையில் அமர்ந்து தமது பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளதுடன் சில தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளன. 13 ஆவது திருத்தத்தை



முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவைக் கோருவது இதில் முக்கியமானது. தவிரவும் மீளக் கூடிப் பேசுவதாகவும் தீர்மானித்துள்ளன. தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மக்கள் செல்வாக்கும் வாக்குப் பலமும் உள்ள கட்சிகளைத் தவிர்த்து முன்னெடுக்கப்படும் முயற்சிகள் பயன் தருவதாக அமையுமா? எனக் கடந்த பத்தியில் கேட்டிருந்தேன்.

> **தீவிர சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை இலங்கை ஒற்றையாட்சி நாடு. இங்கு அதிகாரப் பகிர்வு என்பது தேவையற்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளன. அதனால் இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையையோ, அதற்காக அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தையோ அவை ஆதரிக்கவில்லை. தமிழரசுக் கட்சி வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரம் தமிழீழம் கேட்டது. அதற்கு முன்னரும், பின்னரும் சமஷ்டி கேட்டது. இப்போது சமஷ்டி தொடர்பாகக் கூட வாய் திறப்பதில்லை.**

இந்த யதார்த்தத்தை விளங்கிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனைச் சந்தித்துப் பேசியுள்ளனர். தமிழரசுக் கட்சி இந்தப் பேச்சுக்களில் முதன்மையான பங்கை வகிக்க வேண்டும் என்று இரண்டு தலைவர்களும் சம்பந்தனைக் கேட்டுள்ளனர். ஒன்றிணைந்த தமிழ் பேசும் கட்சிகளின் அடுத்த கூட்டம் கொழும்பில் நடைபெறும் போது இதில் தமிழரசுக் கட்சி பங்குபற்ற வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவை தமிழரசுக் கட்சி குழப்பாது எனத் தெரிவித்த சம்பந்தன் இரண்டு விடயங்களை இரு தலைவர்களுக்கும் கூறியுள்ளார். முதலாவது, இக்கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவைத் தெரிவிப்பது. இரண்டாவது, 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கூடிப் பேசுவதை விட தென்னிலங்கை சிங்கள கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்பது.

சம்பந்தனைப் பொறுத்தவரை இன்று வரை அவர் பங்காளிக் கட்சிகளின் கருத்தைப் பெரிதும் கவனத்தில் எடுப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழரசுக் கட்சியும் சில உதிரிக் கட்சிகளும் என்பதே அவரது பிரதான கருத்தாக உள்ளமையை அவரது கடந்த கால அணுகுமுறைகள் வெளிப்படுத்துகின்றன. கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வது, கூட்டமைப்புக்கான பேச்சாளர் நியமனம், பாராளுமன்ற உறுப்பினராக கலையரசன் நியமிக்கப்பட்டமை, கொழும்பில் நடைபெறுகின்ற தூதரக மட்டத்திலான பேச்சு வார்த்தைகள், இப்போது அமெரிக்காவுக்கு நிபுணர் குழு அனுப்பப்படுகின்றமை என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைகளையும், பிரசன்னத்தையும் தவிர்த்து வெட்டியோடும் அரசியலையே அவர் முன்னெடுத்து வருகிறார்.


கூட்டமைப்பு துண்டு துண்டாக உடைந்து போவதற்கும், தொடர்ந்தும் பிளவு ஏற்பட்டு அனந்தி, ஐங்கரநேசன், விக்னேஸ்வரன், அருந்தவபாலன் என ஒவ்வொருவராகப் பிரிந்து புதிய கட்சிகளை உருவாக்குவதற்கும் காரணமானவரையே தனது செல்லப் பிள்ளையாக வைத்திருந்து காய் நகர்த்தும் சம்பந்தன் புதிய ஒன்றிணைந்த கூட்டணிக்கு முழு மனதோடு ஆதரவு தருவார் என்பதை அவரது பதில் வெளிப்படுத்தவில்லை. வழக்கம் போன்ற பார்க்கலாம் என்ற மாதிரியான பதிலையே அவர் தந்துள்ளார்.

மேலும் சிங்களக் கட்சிகளோடு பேசி அவர்களது இணக்கத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனச் சொல்லியிருப்பது இந்த ஒன்றிணைவின் பயனற்ற தன்மையைப் புட்டுக் காட்டுகின்ற ஒரு முயற்சியாகவோ, திசை திருப்புகின்ற ஒரு முயற்சியாகவோ தான் பார்க்கப்பட வேண்டும். இல்லையேல் "அடுத்த கூட்டத்தில் சேர்ந்து



பேசுவோம். அதன் பின் நானும் வருகிறேன். சிங்களக் கட்சிகளோடு சேர்ந்து பேசி 13 ஆவது திருத்தம் தொடர்பில் அவர்களது இணக்கத்தைப் பெற்றுக் கொள்வோம்" என்றுதான் சம்பந்தன் மனோ கணேசனிடமும், ஹக்கீமுடனும் கூறியிருக்க வேண்டும்.

தீவிர சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை இலங்கை ஒற்றையாட்சி நாடு. இங்கு அதிகாரப் பகிர்வு என்பது தேவையற்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளன. அதனால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையையோ, அதற்காக அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தையோ அவை ஆதரிக்கவில்லை. தமிழரசுக் கட்சி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரம் தமிழீழம் கேட்டது. அதற்கு முன்னரும், பின்னரும் சமஷ்டி கேட்டது. இப்போது சமஷ்டி தொடர்பாகக் கூட வாய் திறப்பதில்லை. கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சிபீடத்துக்குக் கொண்டு வருவதற்கு முண்டு கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பேச்சுக்களில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏக்கிய ராஜ்ஜிய என்ற சொல்லை வைத்து தமிழர்களின் காதில் பூ சுற்றினார். அது ஒருமித்த நாடு என்ற கருத்துடையது. ஒருமித்த என்பது சமஷ்டிக் கட்டமைப்பையே குறிக்கிறது என்றெல்லாம் அப்போது கூறியிருந்தார்.



இப்போது கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் நியமித்த நிபுணர் குழு அமெரிக்கா செல்கிறது. இந்தக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், உறுப்பினர்களாக கனகஈஸ்வரனும், தந்தை செல்வாவின் மருமகளான நிர்மலா சந்திரஹாஸனும் நியமிக்கப்பட்டு உள்ளனர் எனச் சொல்லப்படுகிறது. ஒரு உள்ளகப் பன்மைத்துவக் குழுவாக இதனை உருவாக்க எண்ணியிருந்தால் தமிழ்க் கட்சிகள் சார்ந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையோ, ஸ்ரீகாந்தாவையோ, சி.வி.விக்னேஸ்வரனையோ சம்பந்தன் பிரேரித்திருக்க முடியும். அன்றியும், திம்புப் பேச்சுவார்த்தையில் பங்கு கொண்ட சித்தார்த்தனைக் கூட குழுவில் நியமித்திருக்க முடியும். சமஷ்டி தொடர்பில் காலாதி காலமாகப் பேசி வருகின்ற தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராசாவோ, ஏனைய கட்சியின் மூத்த தலைவர்களோ கூட இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் இவற்றையெல்லாம் புறந் தள்ளி சுமந்திரன் அணி களமிறக்கப் பபட்டுள்ளது.

சமஷ்டி தொடர்பாக சாதாரணமாக அரசியல் படிக்கிற யாவரும் அறிவர். உயர்தர அரசறிவியல் மாணவரிடம் கேட்டால் அமெரிக்கச் சமஷ்டி தொடர்பாக சொல்வார். எனவே, அமெரிக்கச் சமஷ்டி தொடர்பில் இந்தக் குழு அறிவற்றதல்ல. அன்றியும், உப்புச் சப்பற்றதெனத் தமிழ்க் கட்சிகள் கூறும் மாகாண சபை முறையையே நிறுத்தக் கோரும் சிங்களப் பெருந்தேசியத்தின் கர்ச்சிப்பின் மத்தியில் அமெரிக்கச் சமஷ்டி முறையை இலங்கையில் பிரயோகிப்பது எந்தளவு சாத்தியம் என்பது ஒரு வினா.

ஆனால் இந்தக் குழு அமெரிக்க சமஷ்டி பற்றி அறியச் செல்லவில்லை. தமிழர்களின் சமஷ்டி குறித்தான வேணவாவை அமெரிக்கத் தரப்புக்குச் சொல்லப் போகிறது என்றே ஊடகங்களில் செய்தி கசிய விடப்பட்டது. ஒவ்வொரு பத்திரிகை நறுக்கையும் மொழியாக்கிப் படிக்கின்ற, ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கள நிலவரத்தைத் திரட்டுகின்ற, தமிழரின் நீண்ட அரசியல் தொடர்பான கவனக்குவிப்பைக் கொண்டுள்ள அமெரிக்கா இந்தக் குழு மூலமாகவே தமிழர்களின் வேணவாவை அறிந்து கொள்ளப் போகிறதாம்.

அமெரிக்கா சார்பான திருச்சபையைச் சேர்ந்த இரண்டு பேர் உள்ளடங்கிய இந்தக் குழு அமெரிக்கா சென்று தமிழர்களின் வேணவா என்று எதனைச் சொல்லப் போகிறது என்பது முக்கியமானது. சமஷ்டி தொடர்பில் தமிழரசுக் கட்சி உருவான காலத்தில் இருந்து சொல்லி வருவதையா? வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரமான வெளியக சுயநிர்ணயத்தையா? மாகாண சபை முறைமையையா? அல்லது நல்லாட்சி காலத்தின் ஏக்கிய ராஜ்ஜியத்தையா? இந்தக் குழு தமிழர்களின் வேணவாவாக முன்வைக்கப்போகிறது.

தனது ஆசிரியரான கனகஈஸ்வரனுள்ள குழுவுக்கு சுமந்திரனே தலைமை தாங்குவதால் அவர் தகப்பன் சிவபெருமானுக்கே உபதேசம் செய்து தகப்பன் சாமியான முருகன் ஆகிறார் என்று ஒரு ஊடகவியலாளர் புளகாங்கித்து 'நிறைவு' காண்கிறார். தமக்கு அது குறித்து எந்த தகவலும் தெரியாது என்று தெரிவித்த போதிலும் மௌனமாக இருக்கின்றன கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு சம்பந்தன் வைத்த 'செக்' என்று, அதனைக் குழப்பும் அல்லது நீர்த்துப் போகச் செய்யும் ஒன்று என்று ஏன் இதனை எடுத்துக் கொள்ள முடியாது.

ஆக, தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைவும், அதில் எடுக்கப்படும் தீர்மானங்களும் ஒருபுறம் இருக்கிறது. முக்கியமாக 13 ஆவது திருத்தத்தை முறையாக, முழுமையாக அமுல் செய்யுமாறு இந்தியாவை பிரதானமாக இக்கட்சிகள் வலியுறுத்துகின்றன. மறுபுறம் தமிழர்களின் வேணவா தொடர்பில் இந்தியாவோடு அல்ல, அமெரிக்காவோடு கலந்து பேச சம்பந்தன் குழுவினை அனுப்புகிறார். அந்தக் குழு தொடர்பில் பங்காளிக் கட்சிகளோடு ஒப்புக்கேனும் பேசவில்லை. அவற்றைக் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, தனியாவர்த்தனம் வாசிக்கப் புறப்பட்டுள்ளார். இந்தச் சூழலில் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவின் பெறுமதி கேள்விக்குரியதாகிறது.

தமிழ்க் கட்சிகள் இந்த இடத்தில் தமது ஆளுமையைக் கையிலெடுத்து, வலுவான பேரம் பேசவல்ல கூட்டணியாகக் எழுச்சி பெற வேண்டும். சின்னச் சின்ன உதிரிக் கட்சிகளை - ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், சிவகரன் முதலானோரை - அமுக்கக் குழுக்களை எல்லாம் தம்மோடு இணைத்து திரட்சி பெற வேண்டும். தேச எல்லைகள் கடந்து, தமிழ் பேசும் புத்திஜீவிகளையும் இணைந்துக் கொண்டு ஒரு பரந்துபட்ட கூட்டணியாகப் படிமலர்ச்சி காண வேண்டும். மலையக மக்களினதும், முஸ்லீம் மக்களதும் அபிலாசைகளையும் உள்வாங்கி திறந்த மனதோடு உரையாட வேண்டும். அவ்வாறல்லாவிட்டால், கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் நிலையே இந்தக் கூட்டணிக்கும் ஏற்படும். இப்போதே தமிழரசுக் கட்சியில்லாமல் இதனை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து கூட்டணிக் கட்சிகள் தீர்மானத்துக்கு வர வேண்டும். இல்லையேல் முதல் பத்தியில் கூறியவாறு கூடிக் கலையும் முயற்சியாகவே இது மாறும். ■

# பங்காளிகள் சண்டையும் பரிதவிக்கும் பொருளாதாரமும்!

அவதானி





இலங்கையின் முன்னாள் அதிபர் ஜே. ஆர். ஜெயவர்தனா, அறிமுகப்படுத்திய விகிதாசார தேர்தல் முறையும் - 13 ஆவது திருத்தச் சட்டமும் தொடர்ந்தும் அரசியல் கட்சிகளிடையே பெரும் குழப்பத்தையே வளர்த்துவிட்டிருக்கிறதே தவிர, தேசம் இன்னமும் பின்தங்கிய நிலையில்தான் காட்சி தருகிறது.

இக்குறைபோதாது என்று “ ஒரே நாடு - ஒரே சட்டம்” என்ற பூதமும் வெளிக்கிளம்பியுள்ளது.

சமகால அரசின் பங்காளிக்கட்சிகள் அனைத்தும் உள்ளுக்குள் பொருமிக்கொண்டு, அறிக்கை மேல் அறிக்கை விடுத்தவாறு ஊடகச் சந்திப்புகளையும் நடத்தி வருகின்றன.

முன்னாள் அதிபர் மைத்திரிக்கு ஒரு கட்சி, வாசுதேவ நாணயக்காரவுக்கு ஒரு கட்சி, பேராசிரியர் திஸ்ஸ விதாரனவுக்கு ஒரு கட்சி, தினேஷ் குணவர்தனாவுக்கு ஒரு கட்சி, பந்துல குணவர்தனாவுக்கு ஒரு கட்சி, உதய கம்மன்பிலவுக்கு ஒரு கட்சி, விமல் வீரவன்சவுக்கு ஒரு கட்சி, இவை தவிர டக்ளஸ் தேவானந்தா,

> **அமளிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, “ வரவிருக்கும் வரவு - செலவுத்திட்ட அறிக்கையின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் வரும்” என்று அமைச்சர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் அறிவிப்பை விடுத்துள்ளார். ஏற்கெனவே அமைச்சர்கள் மாற்றப்பட்டனர். மீண்டும் ஒரு மாற்றமா..? அமைச்சு அலுவலகங்கள் இனிமேல் பிரியாவிடை நிகழ்வுகளுக்கும் நேரம் ஒதுக்கநேரிடும்.**

வியாழேந்திரன், “பிள்ளையான்” சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கு தலா ஒவ்வொரு கட்சி, இவை அனைத்துக்கும் தலைமைதாங்கும் பசில் ராஜபக்ஷ உருவாக்கிய பொதுஜன பெரமுன கட்சி.

இவை அனைத்தும் பங்காளிகளாகியிருக்கும் இந்த அரசு, சமகால கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் , தலையணை உறையை மாற்றுவதுபோன்று அடிக்கடி அமைச்சர்களையும் மாற்றிக்கொண்டு விலைவாசி உயர்வையும் பெருந்தொற்றையும் கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது.

“அடிமுட்டாள்களைக்கொண்ட நாடாளுமன்றமே தற்போது இயங்குகிறது” என்று அரசில் அங்கம் வகிக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த இராஜாங்க அமைச்சர் தயாஶ்ரீ ஜயசேகர தமது கட்சிக்கூட்டத்தில் தெரிவிக்கிறார்.

“ தயாஶ்ரீ ஜயசேகரவின் கருத்துக்கள் தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ளவேண்டியதில்லை” என்று எதிர்வினையாற்றுகிறார் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம்.

“ ஒரு அரசாங்கத்தை தோற்றுவிப்பதிலும் பார்க்க, தோற்றுவித்த அரசாங்கத்தைக் காப்பாற்றுவதுதான் மிகவும் கடினமானது” என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்.

“மக்களுக்கான சரியான பயணத்தை அரசு மேற்கொள்ளாவிடின், பங்காளிக்கட்சிகள் மாற்று வழியை நாட வேண்டி வரும்” என்று எச்சரிக்கிறார் பேராசிரியர் திஸ்ஸ விதாரன.

இந்த அமளிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, “ வரவிருக்கும் வரவு - செலவுத்திட்ட அறிக்கையின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் வரும்” என்று அமைச்சர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஏற்கெனவே அமைச்சர்கள் மாற்றப்பட்டனர். மீண்டும் ஒரு மாற்றமா..?

அமைச்சு அலுவலகங்கள் இனிமேல் பிரியாவிடை நிகழ்வுகளுக்கும் நேரம் ஒதுக்கநேரிடும்.



ஏற்கெனவே சுகாதார நலத்துறை அமைச்சராகவிருந்த பவித்ரா வன்னியராச்சி, “ இந்த கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மந்திரித்த தண்ணீர் உள்ள மண்குடத்தை நதியிலே விடவேண்டும்” என்று அனைத்துலகப்புகழ் பெற்றுவிட்ட செய்தியும் சொல்லி, செய்தும் காண்பித்தார்.

பெருந்தொற்று நீங்கவில்லை. அவர்தான் அந்த அமைச்சை விட்டு நீக்கப்பட்டார் !



அவரைக் கோத்தாவின் அரசு பதவி மாற்றம் செய்தபோது ஒரு கதையை சொல்லிவிட்டுத்தான் விடைபெற்றார்.

ஜனாதிபதி மீண்டும் ஒரு அமைச்சரவை மாற்றத்தை அறிவிக்கவிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கும் இவ்வேளையில், பவித்ராவின் அந்தக்கதையை மீண்டும் கேட்போமா..?

“ முன்னொரு காலத்தில் ஒரு அரசனும் அவரது ஆலோசகரும் காட்டுவழியாக பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அரசன் எய்த மூன்று அம்புகள் குறி தவறிவிட்டன. அதன்போது, என்றுமில்லாத வகையில் குறி தவறிவிட்டனவே...?! ஏன்..?!” என்று உடன்வரும் ஆலோசகரைக்கேட்டதும், அவர் “ எல்லாம் நன்மைக்கே” என பதிலளித்துள்ளார்.

பயணமும் தொடர்ந்தது.

அரசன், திடீரென தன்னுடைய வாளை உருவியுள்ளார். அப்போது, தவறுதலாக அரசனின் விரலில் அதன் கூர்மை பட்டுவிடுகிறது. அதனால், விரலில் ஒருதுண்டு கீழே விழுந்துவிட்டது. இதுபற்றியும் ஆலோசகரிடம் அரசன் வினவியுள்ளார். அப்போதும் எல்லாம் நன்மைக்கே என, ஆலோசகர் பதிலளித்துள்ளார்.

கடுமையாகக் கோபம் கொண்ட அரசன், அந்த ஆலோசகரை, அங்கிருந்த பாரிய குழிக்குள் தள்ளிவிட்டு, தனது பயணப்பாதையை மாற்றிக்கொண்டு பயணித்துள்ளார்.

அவ்வாறு அரசன் சென்றுகொண்டிருந்தபோது, பலி பூஜைக்காக கூடியிருந்த காட்டுவாசிகளிடம் அரசன் சிக்கி விட்டார். அவர்கள் அப்போது பலி கொடுக்க ஒருவரை தேடிக்கொண்டிருந்தனர்.

அரசன் அவர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார். அரசனை முழுமையாக நீராட்டி எடுத்துவந்தவர்கள், அங்கங்களைப் பரிசோதனை செய்தனர். பலி பூஜைக்கு முழுமையான உடலமைப்பைக் கொண்டவர்களை மட்டுமே பயன்படுத்துவர். ஊனம் உள்ளவரை பலியெடுக்க மாட்டார்கள்.



அரசனின் விரல்களில் ஒரு துண்டு இல்லை என்பதை கண்டுகொண்டனர். அதனால் பலி பூஜைக்கு அரசனை பயன்படுத்தாது விட்டுவிட்டனர். ஆச்சரியமடைந்த அரசன், அங்கிருந்தவர்களிடம் விசாரித்துள்ளார்.

ஊனம் உள்ளவர்களைப் பலியெடுக்கமாட்டோம் என விளக்கமளித்துள்ளனர். அப்போதுதான், எல்லாம் நன்மைக்கே என ஆலோகர் கூறியது அரசனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதன்பின்னர், தான் அவரைத்தள்ளி விழுத்திய குழியைத் தேடிச்சென்று, அதிலிருந்து ஆலோசகரை மீட்டெடுத்தார் அரசன்.

குழியிலிருந்து வெளியேவந்த ஆலோசகர், “என்னைக் குழிக்குள் நீங்கள் தள்ளியதும் நன்மைக்கே” என்றார்.

அரசனுக்கு மீண்டும் அதிர்ச்சி. ஏன் என வினவியுள்ளார். “நானும் உங்களுடன் வந்திருந்தால், அந்தப் பலி பூஜையில் உங்களை விட்டுவிட்டு அடுத்த படியாக என்னையல்லவா பலியெடுத்திருப்பார்கள்...? நான் உயிர் தப்பிவிட்டேன். அதனால் இதுவும் நன்மைக்கே” என அந்த ஆலோசகர் அரசனுக்கு விளக்கப்படுத்தியுள்ளார்.

கோத்தாவின் அரசில் அடிக்கடி அமைச்சர்கள் மாறுவார்களோ இல்லையோ, இதுபோன்ற கதைகள்தான் எதிர்காலத்தில் அமைச்சர்களினால் தயாராகும் என்பது மாத்திரம் நிச்சயம்.

இந்த அரசியல் கூத்துக்களுக்கு மத்தியில் மக்கள் பெருந்தொற்றுக்கும் - விலைவாசி ஏற்றத்துக்கும் இடையில் சிக்குண்டு, ஒரு புறம் வேடன் மறுபுறம் நாகம். இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்கள் போன்று பரிதவித்து வருகின்றனர்.

# இலக்கை அடையாது கற்பனைக் குதிரை

கருணாகரன்



தமிழர்களிடம் சில பழக்கங்களும் ஆழமான நம்பிக்கையும் உண்டு.

போட்டியில் பங்கெடுக்காமல், அதற்குத் துணியாமல், ஓடி முந்துவதற்கு முயற்சிக்காமல் மைதானத்துக்குக் குறுக்கே ஓடிக் கவனத்தை ஈர்த்து விடலாம் என்று கருதுவது.

முந்திச் செல்வோரைப் பற்றிக் குறை சொல்வது அல்லது குற்றம் சாட்டுவது. முந்திச் செல்வோரைப் பார்த்து வெப்பியாரப்படுவது.

முந்திச் செல்வோரை எப்படியாவது விழுத்தி விட வேண்டும் என்று யோசிப்பது.

அப்படிச் செய்து வெற்றி இலக்கை எட்டி விடலாம் என்று நம்புவது.

ஒன்றும் சாத்தியமில்லை என்றால் வெளியாரிடம் இதைப் பற்றி முறையீடு செய்து புலம்புவது. அவர்களின் கருணையையும் இரக்கத்தையும் கோருவது.

இப்படிப் பலதுண்டு. ஆனால் இதெல்லாம் பொதுச் சூழலில் ஏற்புடையன வல்ல. இவை பெறுமதியைத் தரக் கூடியனவும் அல்ல. வெளியுலகில் இவற்றுக்கு எந்த மதிப்பும் கிடையாது. பதிலாக மேலும் மேலும் பின்னடைவைத் தரக் கூடியனவே இவை.

இந்த மாதிரிக்குணங்களால்தான் அவர்களால் ஏனைய சமூகங்களை அங்கீகரிக்க முடியாமலிருக்கிறது. பிற சமூகத்தினரோடு இணங்கிப் போக முடியாமலுள்ளது. பிற சமூகத்தினரோடு இணைந்து வேலை செய்வதற்கு அஞ்ச வேண்டியுள்ளது. பிற சமூகங்களின் வளர்ச்சிக்கு நிகராக நிற்கவோ வளரவோ முடியாமலிருக்கிறது.

இதனால் பிற சமூகங்களைப் பார்த்து எப்போதும் தங்களுக்குள் பொருமிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இது ஒரு நோய்க்கூறாகும். ஆனால், இதை அவர்கள் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

இதற்குச் சிறந்த - வெளிப்படையான உதாரணம், தமிழ் ஊடகங்கள். அநேகமாக எல்லாத் தமிழ் ஊடகங்களும் (எங்கேனும் அபூர்வமான விலக்குகள் ஒன்றிரண்டிருக்கலாம்) இந்த நோய்க் கூறுக்குள்ளானவையே. வெளிப்படுத்தப்படும் செய்திகளிலிருந்து எழுதப்படும் ஆசிரியர் தலையங்கங்கள், கட்டுரைகள் என எல்லாவற்றிலும் இந்தக் குற்றப்படுத்தும் குணத்தைக் கவனிக்கலாம். செய்திகளிலும் ஆய்வுகளிலும் எப்படிப் பிறரை, பிற சமூகங்களைக் குற்றப்படுத்த முடியும்? அது ஊடகவியல் பண்புக்கே மாறானது என்றால், நாங்கள் அப்படித்தான். இது இனப்பற்றின்பாற்பட்ட சங்கதி என்று ஒரே ஆணியை அடித்து விடுவார்கள்.

இதனால் எப்பொழுதும் யாரையும் குறை சொல்லிக் கொண்டேயிருப்பது. அல்லது எல்லோரிடத்திலும் குற்றம் கண்டு பிடிப்பது என்ற வியாதி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை என்ற தமிழ்ப்பட்டறிவைக்கூட இந்தத் தமிழ்ப்பரப்பு கவனத்திற் கொள்வதில்லை.

இது போட்டி உலகம். திறன்களுக்கே மதிப்பளிக்கும் யுகம். போட்டியில் ஈடுபடும் மனத்துணிவும் அதில் வெல்லும் திறனும் கிட்டாத வரையில், அதை நாம் உருவாக்கிக் கொள்ளாதவரையில் நமக்கு வெற்றியும் கிடையாது. மதிப்பும் கிடையாது என்பதை இவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

இது ஏன்?

ஆனால், இங்கே ஒரு வேறுபாடும் சிறப்புக் குணமும் உண்டு என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அரசியல், அறிவியற் செயற்பாடுகள், பொது விடயங்கள் போன்றவற்றில் இணங்கிப்போகவோ, உபாயங்களைக் கையாளவோ, நெருக்கடிகளை எதிர்கொள்ளவோ பின்னிற்காத தமிழ்ச்சமூகம் அரசியல் மற்றும் பொது விடயங்களில் எத்தகைய விட்டுக் கொடுப்புக்கும் இணக்கத்திற்கும் இணைந்து செயற்படுவதற்கும் மறுத்து நிற்கும்.

அதாவது தனிப்பட்ட விடயங்கள், நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எந்தக் கதவாலும் போய்க் காரியத்தைச் சாதிக்கும் மக்கள், அரசியல் மற்றும் பிற பொது விடயங்களில் எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. எந்தச் சமரசத்துக்கும் உடன்பாடில்லை. “அடைந்தால் மகா தேவி. இல்லையென்றால் மரண தேவி” என்று அடம்பிடிப்பது ஏன்?

இது தமிழ்ச்சமூகத்தின் இரண்டக நிலையைத்தானே காட்டுகிறது.

ஒரு போதும் தன்னைத் திரும்பிப் பார்த்துக் கொள்ளாத, தன்னைத் திருத்திக் கொள்ள விரும்பாத ஒரு மக்கள் திரளினராக இவர்கள் இருப்பது ஏன்?

இதற்கு மேலும் ஒரு எளிய உதாரணமாக கடந்த தீம்புனல் (06 நவம்பர் 2021) பத்திரிகையில் வெளிவந்த செல்வழகனின் கட்டுரையொன்றில் குறிப்பிடப்படும் விடயத்தைச் சொல்லலாம். அவர் எழுதுகிறார் “முள்ளிவாய்க்காலில் யுத்தம் நிறைவு பெற்றது. மஹிந்த 13 + என்று அறிவித்தார். 13 ஆவது திருத்துக்கு அப்பால் சென்று தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப்போவதாகச் சொன்னார். அவரது இரண்டு பதவிக்காலத்திலும் அது நடைபெறவில்லை” என.

மேலும் இன்னொன்றையும் செல்வழகன் சொல்கிறார் “நல்லாட்சி என்ற பெயரில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பலமான ஆதரவை வழங்கியது. அமைச்சரவையில் இணைந்து கொள்ளவில்லையே தவிர, அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் உதவியது. அந்த வேளையில் சமஷ்டி என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், ஏக்க ராஜ்ஜிய என்ற சொல்லை கூட்டமைப்பின் பேச்சாளரான எம். ஏ. சுமந்திரன் அழுத்திக் கூறி அது ஒருமித்த நாடு என்று வியாக்கியானப்படுத்தினார். அந்தக் காலத்திலும் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை” என்று.

இந்த இரண்டிலும் வெளிப்படுத்தப்படுவதென்ன? பிறர் மீதான குற்றச்சாட்டுக்கள்தானே. அதாவது முதலாவது கூற்றில் ராஜபக்ஷக்களின் அரசாங்கமும் ஆட்சியும் குற்றப்படுத்தப்படுகிறது. இரண்டாவதில் ரணில் - மைத்திரி கூட்டாட்சியும் அதற்கு ஆதரவளித்த தமிழரசுக் கட்சியும் குற்றப்படுத்தப்படுகின்றன.

உண்மையில் இது ஒரு விடயமே இல்லை. ஏனென்றால், அரசியல் செல்நெறியின் அடிப்படையில் நோக்குவதாக இருந்தால் இது இப்படித்தான் நடக்கும். இப்படித்தான் இருக்கும். ஏனென்றால் அரசியல் என்பது அப்படித்தான். அதாவது அது ஒரு தீராத புதிர் நிறைந்த விளையாட்டு. விவேகமும் திறனும் அர்ப்பணிப்பும் தந்திரோபயங்களும் சூதும் வாதும் குழிபறிப்பும் விட்டுக் கொடுப்பும் மேன்மையும் கீழ்மையும் மறுப்புகளும் ஏற்புகளும் திணிப்புகளும் நிறைந்த ஒரு ஆடுகளம். ஆடுகளமாகவும் ஆடும் ஆட்டமாகவும் மாறி மாறித் தொழிற்படும் ஒன்று. உலகெங்கும் அரசியல் அப்படித்தான் மேற்கொள்ளப்படுகிறது. ஓயாத ஆடுகளங்களாகவும் ஓயாத ஆட்டங்களாகவும் அரசியல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இதனால்தான் “அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை. நிரந்தர நண்பனும் இல்லை” என்று சொல்லப்படுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் நட்பு நாடு ரஷ்யாவாக இருந்தது. இப்பொழுது அது அமெரிக்கக் கூட்டணியில் உள்ளது. ஒரு காலம் அமெரிக்காவின் அணுக்குண்டு வீச்சுக்குள்ளான யப்பான் இன்று அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளி.

இங்கே நிகழ்ந்து கொண்டிருப்பது அடிமைப்படுத்தல் - விட்டுக்கொடுத்தல் - சோரம்போதல் அல்ல. இது காலச் சூழலையும் யதார்த்தத்தையும் பொறுப்பையும் உணர்ந்ததன் அடிப்படையில் தந்திரோபயம், இராஜதந்திரம், சாணக்கியம், சூக்குமம் போன்ற பல அரசியல் பொறிமுறைகளின்பாற்பட்டு ஏற்பட்ட விளைவுகளாகும். உலகம் இப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சும்மா பொச்சரிப்பதாலும் சப்புக் கொட்டுவதாலும் திட்டித் தீர்ப்பதாலும் அற்புதக் கதவுகள் எதுவும் திறந்து விடாது. மோசஸ் நிகழ்த்திய அற்புத வழிதிறப்பைப்போல எந்த அதிசயமும் நிகழவும் மாட்டாது.

இப்பொழுது மஹிந்த ராஜபக்ஷ சொன்ன விடயத்துக்கே வருவோம். அவர் 13 + பற்றிச் சொன்னார்தான். 13 ஆவது திருத்துக்கு அப்பால் சென்று தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப் போவதாகவும் சொல்லியிருந்தார் என்பது உண்மையே. விரும்பியோ விரும்பாமலோ இதற்கு அவர் தயாராகவும் இருந்தார். அன்றைய சூழலில் இதை எதிர்க்கும் நிலையில் எதிர்க்கட்சிகளும் இருக்கவில்லை. ஏன் சிங்கள மக்களும் இதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்தனர். யுத்தத்தில் பெற்ற வெற்றியானது மகிந்த ராஜபக்ஸவை மறுதலித்துப் பேசுமுடியாத ஒரு சூழலை அப்பொழுது உருவாக்கியிருந்தது. அந்த நம்பிக்கையில்தான் அவரும் வெளிப்படையாக இந்த அறிவிப்பைச் செய்தார்.

ஆனால், இதை ஒரு வாய்ப்பாகக் கொள்ளத் தவறியது யார்? அது ஏன்?

அப்பொழுது பிராந்திய சக்தியும் மேற்குலகும் மகிந்த தரப்புக்கு எதிராக சரத் பொன்சேகாவைக் களமிறக்க முற்பட்டது. அதாவது ராஜபக்ஷக்களின் யுத்த வெற்றிக்கு முன்னே நிற்கக் கூடிய அரசியல் தலைமை எதையும் தெரிவு செய்ய முடியாத நிலையில் பிராந்திய சக்தியும் மேற்குலகும் (அமெரிக்கா) சரத் பொன்சேகாவை ராஜபக்ஷக்களுக்கு எதிராக - தமிழர்களுக்கு முன்வைக்கவிருந்த தீர்வுக்கு எதிராகக் களமிறக்கியது. அதை ஆதரிக்குமாறு தமிழ்த் தரப்பை வற்புறுத்தியது. இதற்கான சந்திப்புகளை இந்தச் சக்திகள் தொடர்ந்து நடத்தின. இதேவளை வெளிச்சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் ஆடக் கூடிய சிங்களத்தரப்பையும் இந்தச் சக்திகள் பயன்படுத்தின.

இது ஒன்று.

இரண்டாவது, புலம்பெயர் சக்திகளுடன் தொடர்பு கொண்டு அவர்களை தீவிர நிலைப்பாட்டை எடுக்க வைத்தன. அதன்படி இத்தனை இழப்புகளுக்குப் பிறகு 13 + தானா என்று அவை குரல் எழுப்பின. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இன்னும் மேலே சென்று ஏதோ

(08 ஆம் பக்கம் பார்க்க...)

> **“பிராந்திய சக்தியும் மேற்குலகும் மகிந்த தரப்புக்கு எதிராக சரத் பொன்சேகாவைக் களமிறக்க முற்பட்டது. அதாவது ராஜபக்ஷக்களின் யுத்த வெற்றிக்கு முன்னே நிற்கக் கூடிய அரசியல் தலைமை எதையும் தெரிவு செய்ய முடியாத நிலையில் பிராந்திய சக்தியும் மேற்குலகும் (அமெரிக்கா) சரத் பொன்சேகாவை ராஜபக்ஷக்களுக்கு எதிராக - தமிழர்களுக்கு முன்வைக்கவிருந்த தீர்வுக்கு எதிராகக் களமிறக்கியது. அதை ஆதரிக்குமாறு தமிழ்த்தரப்பை வற்புறுத்தியது.”**

# என்ன உலகமடா பரமானந்தா? 29

தமிழ்க்கவி

**“தீவாளிக்கெண்டே கோழிச்சேவல் நேந்து விட்டமாதிரி கூட்டுக்க நிக்கும். காத்தால துவங்கினா அடுப்படிக்கை காச்சி வடிக்கிறதிலயே மனிசி கவனமா இருக்கும். வாறவை போறவை எல்லாரும் சாப்பிட்டாக வேணும். மனிசன் திண்ணைக் குந்தில இருந்தபடி ஙா... சோனாதி.. வாடா கொக்கா சமைச்சிட்டாள் சாப்பிட்டிட்டுப்போ... என்ன வல்லிவிரம் கறி என்ன பிடிச்சாய்? கோழியடா நல்ல பாணிச்சேவல் பதமான கோழி எப்பன்”**

என்ன ஒரு தீவாளி சைக், ஒரு இதம்பதமில்லை. தீவாளி எண்டா ஒரு கலகலப்பு வேண்டாமே. அந்த நாளையில தீவாளியெண்டா காலமை விடியக்கு முன்னம் வெடிச்சத்தம் காதைப்பிளக்கும். சும்மா சொல்லக்கூடாது. மூலவெடி அஞ்சியேம். பட்டாசுக்கட்டு பத்திச்சேம். பட்டாசுக்கட்டைக் கொணந்து ஒருபக்கம் தலையச் சரிச்சுக் கொண்டு சாத்துவாய் ஊத்த ஊத்த நூல் பிரிச்சு நாலு பேருக்கும் பங்கு பிரிச்சுக் குடுக்கிறது எங்கட பெத்தாதான்.

ஆளுக்கு அஞ்சு வெடி வரும். அதைக் கொண்டே ஓட்டைச் சிரட்டைக்கால திரியை வெளிய தெரிய வைச்சுப் பத்த வச்சா சிரட்டை பறக்கும் பாரடா... ஹஹஹ... செல்லடியில பறக்கிற தறப்பால் கொட்டிலுகள் போல அவ்வளவு ஜாலியா...சிக் ஏன்ரா என்ர புத்தி இப்பிடிப் போகுது. எதை எதுக்கு உதாரணமாச் சொல்லுறன்பார். ம்...எலிக்கு உயிர் பூனைக்கு விளையாட்டு. எல்லாம் முடிஞ்சுதடா.

தீவாளி நாத்து பகல் மூண்டு மணி கடந்தா நாங்கள் ரோட்டிலதான் அதிலயும் எங்கட கந்தப்பண்ணை குடிச்சிட்டு வந்தா கலாதிதான். அந்தாள் தீவாளிக்கு பட்ஜட் போடக்கையே முதல் சாராயம் எத்தினை போத்தில் எண்டதை வரையறுத்துப் போட்டுத்தான் மற்ற மற்ற சிலவுகளக் குறிப்பார். தீவாளிக்கெண்டே கோழிச்சேவல் நேந்து விட்டமாதிரிக் கூட்டுக்க நிக்கும். காத்தால துவங்கினா அடுப்படிக்கை காச்சி வடிக்கிறதிலயே மனிசி கவனமா இருக்கும். வாறவை போறவை எல்லாரும் சாப்பிட்டாக வேணும். மனிசன் திண்ணைக்குந்தில இருந்தபடி ஙா... சோனாதி.. வாடா கொக்கா சமைச்சிட்டாள் சாப்பிட்டிட்டுப்போ... என்ன வல்லிவிரம் கறி என்ன பிடிச்சாய்? கோழியடா நல்ல பாணிச்சேவல் பதமான கோழி எப்பன் திண்டிட்டுப்போ... எண்டு சொல்லிக் கொண்டே ஆனா அவர் சாப்பிட மாட்டார். சாப்பிட்டா குடிக்கிறது நிப்பாட்ட வேணுமே. கந்தப்பற்ற அலப்பறையப்பார்.

‘குடிக்கிறதால ஒரு மனிசன் கெட்டுப் போறான் எண்டதெல்லாம் பொய் வடிகட்டினபொய். என்னைப்பார். எனக்கென்னடா இரும்பு மாதிரித்தான் தேகம். நாளைக்கு தோட்டத்தில இறங்கினாலும் ஐநூறு கண்டுத்தறை கொத்தித்தான் கரையேறுவன். கெட்டா போனன். டேய் என்னத்துக்கடா உழைக்கிறம் கேள். பாடுபட்டுத்தேடி பணத்தைப் புதைத்து வைத்த, கேடு கெட்ட மானிடனே கேள் .. எது கேடுகெட்ட மானிடனே கேள். கூடுவிட்டிங்கு ஆவிதான் போன பின்னர். யாரோ அனுபவிப்பார் அந்தப்பணத்த நான் உழைச்சு சேத்து வக்க ஆரோ தின்னப்போறான். எடேய் நல்லா குடிக்கோணும் நல்லாத்தின்னோணும். ஆண்டனுபவிக்கவும் ஒரு குடுப்பினை வேணும். ராசன் சாப்பிடு. சோறு கிடக்கடா... ஙா...என்னா... கந்தயட்டியோ. பேந்தேன் இஞ்ச வாறாய்...ங...எடேய் இரும்படிக்கிற இடத்தில ஈக்கு என்ன வேலை.

காத்தால ஒரு சாவல் சட்டிக்க போட்டுது. இனி பின்னேரம் ஒண்டு போப் போகுது. பிறகேன்ரா பாவி இஞ்ச வாறாய். நீ செய்த வினை உன்னை அனுபவிக்கவிடயில்லைக் கண்டியோ எல்லாரும் வெடிகொளுத்தித் திண்டு களிக்க. உனக்குப் பட்டினி விதிச்சிருக்கு போடா போ... ‘நந்தவனத்திலோராண்டி நாலாறுமாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்தானொரு தோண்டி அதை கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி’ தனானே தானாதனானா... என்ன பாட்டில பிழையோ ஹ சங்கை கீர் கீரென அறுக்கும் கீரனோ என்பாட்டை ஆராய்ந்து சொல்லத்தக்கவன்.. சொல்லும் சொல்லிப் பாரும்.

“இல்லை நாலாறுமாதமாய் குயவனை வேண்டி எண்டதில கணக்குப்பிழைக்குதெல்லோ பத்து மாதந்தானே கர்ப்பகாலம்.” ஹோ ஹோ ஹோ... உதைத் தான்ரா சொல்லுறது ‘பொயட் றைற்ஸ’ எண்டு. நாலாறெண்டா இருவத்தினாலெண்டு நீ சொன்னா, நாலும் ஆறும் பத்தெண்டு ஆண்டிச்சித்தர் சொல்லுவாரடா பார், சாராயம் உள்ள போனா பூராயம் வெளிய வரும். என்ன குடிகாறன்தானே பிரட்டிப்போடலாம் எண்டு நினைச்சிட்டாய் என்ன?

குடிச்சா ஈரல் பழுதாப்போமண்ணை ஏன் உந்தமாதிரி குடிக்கிறாய்? ஹ... பொடியா சொர்க்கம் மதுவிலே எண்டு இப்பக்காலத்திலயும் பாட்டிருக்கடா.. எடேய் குடிச்சுப்பார் அதில உள்ள சுகம் தெரியும் சும்மா அவனாரோ எழுதிறான்

பேசுறானெண்டு நீ பறையாதை. சாராயத்தில எவ்வளவு விசியம் இருக்குத் தெரியுமோ? அது கொஞ்சமா உள்ள போக உலகம் பக்கெண்டு விரிஞ்சு குடுக்குமடா... இன்னும் கொஞ்சம் போக ஞானிகளும் சித்தர்களும் கண்ட அந்த ஏகாந்தம் சித்திக்குமடா. அங்கால கொஞ்சம் பருக உடம்பில பாரம் குறைஞ்சு பறக்கிற மாதிரி ஒரு சுகம். எங்க போறம் எதில விழுகிறம் எண்டு தெரியாம அந்தரத்தில - என்ன சாக்கடையில விழுறமோ? பேயா அது தான்ரா ஞானிகளும் மேதைகளும் சொன்ன சமத்துவம். மெத்தை சாக்கடையானாலும் அது பஞ்சு மெத்தையாகி உலகத்தையே மறந்து படுக்கிறதுக்கு உன்னால முடியுமா உன்னால முடியுமா சொல்லு?



உழைக்கிறவன் ஒரு நாளைக்கு எப்பன் குடிச்சா உடம்பு அலுப்புத் தீருமடா. உந்த வருத்தம் வரும் ஈரல் கெட்டுப்போம் எண்டதெல்லாம் சும்மா. உவன் தில்லையின்ர ராசனப்பார். விடிஞ்செழும்பி அவன் குடிக்கிறதே சாராயந்தான். அவனுக்கென்ன கோதாரி. நல்லாத்தானே இருக்கிறான். எடேய் இண்டைக்கு கோடானு கோடி சனம் குடிக்கிறதாலதானே கவுண்மேந்தும் ஓடிக்கொண்டிருக்கு எங்கே மதுவிலக்கைப் போடட்டன் பாப்பம் ஹ... அரசாங்கம் ரிம்மிலதான் ஓடும். நாங்கள் தான்ரா இந்த மண்ணின்ர உண்மையான குடிமக்கள். பங்கார் கொரோனா காலத்தில முதல் திறந்த கடை எது? ங... இண்டைக்குக் குடியால வாற பெருவாரியான சண்டை சச்சரவுகளை வச்சுத்தான் சில குடும்பங்கள் பல குடும்பங்களா பெருகிது.

தம்பி போத்தல் திறக்கயுக்க மாமன் மச்சான் அப்பன் பிள்ளை எண்ட மரியாதை இருக்கும் முதல் ரவுண்டுக்கு அவனவன் கிளாசை எடுத்துக் கொண்டே மறைவில நிண்டு குடிச்சிட்டு கிளாசை வைப்பங்கள். ரெண்டாவது ரவுண்டுக்கு அதிலயே நிண்டு மற்றப்பக்கம் திரும்பி நிண்டு குடிப்பாங்கள் அங்கால அப்புமச்சான் மாமா மச்சான் பொடியளும் மச்சான்தான் சமரசம்... உலாவும்... இடமே... ஏஏஏ. மேசையில். ஒருத்தனுக்கொருத்தன் கொஞ்சிக்குலாவுறதைப் பாக்க வேணுமே.

அரசாங்கத்தை வாழ வைக்கினமாம் மண்ணாங்கட்டி குடியால வாற பிரச்சினையளுக்கு வைத்தியசாலைக்குப் போனா அந்த வைத்தியத்துக்கு அரசாங்கம் எவ்வளவு சிலவழிக்கிது எண்டது தெரியுமே... அத விடு இண்டைக்குத் தீராத நோயாளியளுக்கு மாசாமாசம் ஐயாயிரம் ரூவாக்காசு குடுக்க எவளவு பணம் சிலவாகுது.

உதென்ன கதையடா நீ கதைக்கிறது தென்னைமரத்தில தேள்கடிச்சா பனைமரத்துக்கோ நெறிகட்டுறது. எவனாயிருந்தாலும் விதைச்ச வினைய அறுக்கத்தானே வேணும். காசைக் குடுத்தாப்போல அவங்கள் அனுபவிக்கிற வலிய நிப்பாட்ட ஏலுமே. அதுக்குக் கொஞ்சம் குடிச்சாத்தான்ரா ஏலும். எட பொடியா பிறந்த அண்டைக்கே சாகிறதெண்டதும் முடிவான விசியந்தான். வேகிற உடலுக்கு வெள்ளியென்ன செவ்வாயென்ன திண்டு குடிச்சு அனுபவிச்சுப் போகட்டன்.

குடி குடியக் கெடுக்குந்தான் ஆனா குடியப்பழகினவனுக்குப் புத்தி சொல்லப் போறது மடத்தனம் ஏனெண்டா அவன்ர குடலும் மதுசாரத்தால கெட்டுக்கிடக்கும். அவன்ர புத்தியும் மதுபாவனையால மரத்துப் போய்த்தான் கிடக்கும் அந்த மயக்க நிலை ஆர் சொல்லுற புத்தியையும் கேளாது. அதுகும் தீவாளிநாத்து இதுக்கெண்டே விதிச்ச விதியா குடிமக்கள் குடிக்கவும் தின்னவும். இது எதிலயும் நாட்டமில்லாம கோயிலுகள்ளயும் புராணங் கேக்கிது. ■

---

# இலக்கை அடையாது கற்பனைக் குதிரை

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரகடனங்களையெல்லாம் செய்தது. அதற்கான தூண்டலை வழங்கியவையும் இந்தச் சக்திகளே.

மூன்றாவது, அப்பொழுது மாகாணசபைத் தேர்தல் முடிந்து, விக்கினேஸ்வரன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில். அந்த நிகழ்வில் விக்கினேஸ்வரனின் சம்மந்தி வாசுதேவவும் கலந்து கொண்டிருந்தார். இதனையடுத்து ஒன்பது மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்குமான ஒரு மாநாட்டை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். அதில் தமிழர்களின் அரசியல் அபிலாஷையின்பொருட்டு 13 + பற்றிப் பேசப்படும் என்று சொல்லப்பட்டது. இந்தச் சந்திப்பில் விக்கினேஸ்வரன் சற்று அமைதியாக இருக்க வேண்டும். பதிலாக சிங்களத் தரப்பிலிருந்து (பிற மாகாணசபையொன்றிலிருந்து அல்லது பிறவற்றிலிருந்து) 13 + பற்றிப் பேச்சு எடுக்கப்படும். அப்படிச் சிங்களத்தரப்பிலிருந்து பேசப்பட்டால் அது அனைவருக்குமான தீர்வாகவும் பொதுவான ஒரு விசயமாகவும் நோக்கப்படும் என்று கூறப்பட்டது.

விக்கினேஸ்வரனும் அன்றைய சூழலில் அதற்கான இணக்க மனநிலையில்தான் இருந்தார். ஏறக்குறைய இதை ஏற்றுக் கொண்டவராகவே சம்மந்தனும் இருந்தார். ஆனால், வெளிச்சக்திகள் இதையிட்டுப் பதற்றமடையத் தொடங்கின. அவை விக்கினேஸ்வன் இந்த முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று அறிவித்தன. அறிவித்தது மட்டுமல்ல, அழுத்தத்தையும் கொடுக்க முற்பட்டன. யுத்தக் குற்றவாளிகளுடன் உங்களுக்கு என்ன பேச்சு? என்ற கொந்தளிக்கும் கேள்வியை எழுப்பி விக்கினேஸ்வரனை நிலை குலைய வைத்தன.

மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் குடும்பத்தோடு நின்று பதவிப் பிரமாணம் செய்த விக்கினேஸ்வன், அடங்காத்தமிழன் 02 எனப் புது அவதாரம் எடுத்துப் பிரகடனங்களைச்செய்யத் தொடங்கினார்.

அதாவது வேதாளம் முருங்கையில் ஏற்றப்பட்டது.

இது சிங்களத் தரப்புக்குப் பெரிய வாய்ப்பாக மாறியது. 13 + பற்றியே கதைக்கத் தேவை இல்லை என்ற நிலையை உருவாக்கியது. பிறகு ஏற்பட்ட அரசியற் நெருக்கடிகள் அடுத்து வந்த நல்லாட்சி அரசாங்கத்தையும் பாதித்தது. வாய்ப்புகள் அற்றுப்போயின. இப்பொழுது நிலைமை படுமோசமாகி விட்டது. இனி 13 ஆவது பரவாயில்லை. அதையாவது அமுல்படுத்துங்கள் என்று கெஞ்ச வேண்டிய நிலையில் தமிழர்கள் வந்து நிற்கிறார்கள்.

பிறகு நடப்பதெல்லாம் எல்லோரும் அறிந்ததே. இப்பொழுது “மாடு சாகவேண்டும் என்று காகங்கள் திட்டுகின்றன”. என்ன செய்வது, எந்த மாடும் எந்தக் காகத்தின் திட்டுதலுக்காகவும் செத்து மடிவதில்லையே. இன்னொரு பக்கத்தில் “உறுமீன் வருமளவும் வாடி நிற்குமாம் கொக்கு” என்பதைப்போல இந்தியா, அமெரிக்கா, ஐ.நா எல்லாம் வந்து தீர்வொன்றைப் பெற்றுத் தரும் என்று காத்திருக்கும் படலம் தொடர்கிறது.

இதற்கு யாரை நோவதாம்?

நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு...

தமிழர்களின் கற்பனைக் குதிரைகள் ஓடுவதுமில்லை. களைப்பதுமில்லை. இலக்கை அடைவதுமில்லை. ■

# மாதன முத்தாக்களின் கும்மாளம்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

**“இரண்டு ஆண்டுகளுக்குள் ஆட்சியைத் தக்க வைப்பதற்குப் பெரும்பாடு படுகின்றனர் ராஜபக்ஷக்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்திருக்கிறோம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குத் தம்மை யாராலும் எதனாலும் அசைக்க முடியாது. தனிப் பெரும்பான்மை தமக்குண்டு. இனி எண்ணியதெல்லாம் கைகூடும். நினைத்ததை எல்லாம் செய்து முடிப்போம். இதற்காகவே நாம் அண்ணன் தம்பிகளாகவும் சித்தப்பா பெரியப்பாவாகவும் ஆட்சியமைக்கிறோம் என்றெல்லாம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டிருந்த ராஜபக்ஷக்களின் காலை வாரிவிட்டன கடந்த இரண்டு ஆண்டுகள்.”**

பெரும்பாலான சிங்கள வீடுகளில் இப்பொழுது “மாதன முத்தாக்களின்” கதையே பேசப்படுகிறது. மாதன முத்தாக்களை நம்பித் தங்களுடைய ஆட்டின் தலையைக் காப்பாற்றுவதற்குக் கொடுத்து விட்டோமோ? என்று சிங்கள மக்கள் யோசிக்கிறார்கள். கடைசியில் பானையும் மிஞ்சாது. ஆடும் மிஞ்சாது என்ற நிலையென்றால் யாருக்குத்தான் யோசனை வராது?



முட்டாள்களை நினைத்துச் சிரிப்பதற்கு இலங்கையில் மாதன முத்தாவின் கதை பிரபலம். அதிகாரத்தையும் அறிவீனத்தையும் பரிகாசம் செய்வதற்கு - பழிப்பதற்கு - இந்தக் கதையை விட வேறு எதுவும் சிறப்பில்லை. காலந்தோறும் இந்தக் கதையை நினைவூட்டும் ஆட்கள் இருப்பார்கள். வரலாற்று நிகழ்வுகளும் நடந்து கொண் டிருக்கும்.

இப்பொழுது இதற்கு மிகப் பொருத்தமானவர்கள் ராஜபக்ஷக்கள். அதிலும் குறிப்பாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ மிக மிகப் பொருத்தமானவர். வரலாற்று நிகழ்வு என்றால் அது இன்றைய ராஜபக்ஷக்களின் ஆட்சியாகும்.



நாட்டுக்கும் தமக்கும் ஒரு நல்ல மீட்பர் என்று நம்பியே கோத்தபாய ராஜபக்ஷவைச் சிங்கள மக்கள் ஆட்சிபீடமேற்றினார்கள். பதவியேற்ற கையோடு அரிசிக் கடை, ஆஸ்பத்திரி, அரச அலுவலகங்கள், மரக்கறிச் சந்தை என்று எங்கெல்லாமோ அவரும் அதிரடி-யாக “கள விஜயம்” செய்தார். மக்கள் நலனே முக்கியம். அதற்காக, தான் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் இறங்கி நிற்பேன் என்றார் ஜனாதிபதி. ஜனாதிபதியின் இந்த அதிரடிக் களவிஜயத்தைக் கண்டு அரச உத்தியோகத்தர்கள் தொடக்கம் அரிசிக் கடைக்காரர்கள் வரையில் எல்லோரும் கலங்கிப்போனார்கள்.

இப்படி ஒரு ஜனாதிபதியை, ஒரு தலைவரை வரலாற்றில் ஒரு போதுமே தாம் பார்த்ததில்லை என்று மக்கள் வியந்தனர். தாங்கள் சரியான ஒருவரைத்தான் தெரிவு செய்திருக்கிறோம் என்று இரவும் பகலுமாகப் பேசிக்கொண்டனர். மெய்யாகவே பெரும் புரட்சி நடக்கப்போவதாகச் சிங்கள மக்கள் நம்பினார்கள். இருக்காதா பின்னே, வரலாற்றின் அதிசயமாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஒரு ஜனாதிபதி இப்படிச் சாதாரணமாக இறங்கித் தெருவில் திரிகிறார் என்றால் - யார்தான் மயங்க மாட்டார்கள்?



ஆனால், இந்த மீட்பரின் சாகஸ விளையாட்டுகள் நீடிக்கவில்லை. அதற்குள் நாசமாய்ப் போன கொரோனா வந்தது. கொரோனாவோடு சேர்ந்து இலங்கையை ஆட்டிப்படைக்கும் பொருளாதார நெருக்கடியும் வந்தது. கூடவே சீன, இந்திய, அமெரிக்க, ஐ.நா நெருக்கடிகளும் வந்தன. இதெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இப்பொழுது ஆட்சியைக் கொண்டு நடத்தவே முடியாத அளவுக்கு ஆளும் தரப்புக்குள்ளேயே ஆயிரத்தெட்டு நெருக்கடிகள் உருவாகியுள்ளன.

ராஜபக்ஷக்களை ஆட்சியிலிருத்துவதற்கு ஆதரவளித்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் இப்பொழுது அரசாங்கத்துக்கு மிகப் பெரிய நெருக்கடியாகவும் சவாலாகவும் மாறியிருக்கின்றனர். “அரசாங்கத்தை ஆதரிக்கும் அளவுக்கு அதைச் சரியாக வழிநடத்துவதற்கான பொறுப்பும் தமக்குண்டு. அரசாங்கம் தவறிழைத்தால் அதைச் சுட்டிக் காட்ட வேண்டும். சரியாக்க வேண்டும். முடியாதென்றால் அதை விமர்சிக்க வேண்டும். எதிர்த்துப் போராட வேண்டும். ஆட்சியை அமைப்பதற்கு ஆதரவளித்ததும் மக்களுக்காக. இப்பொழுது அரசாங்கத்தை விமர்சிப்பதும் மக்களுக்காகவே. அன்றும் மக்களுக்காகவே தெருவில் இறங்கினோம். இனியும் மக்களுக்காக அப்படி இறங்குவோம் என்று சொல்கிறார் விமல் வீரவன்ஸ.

இது ஒரு வகையில் அரசுக்கு - பங்காளிகளுக்கான எச்சரிக்கை என்றே சொல்ல வேண்டும். இந்த நிலையை எப்படியும் சமாளிக்க வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ கடுமையாக முயற்சிக்கிறார். கெஞ்சாத - கொஞ்சாத குறையாக பங்காளிகளின் கைகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறார் அவர் - பிரதமர்.

இரண்டு ஆண்டுகளுக்குள் ஆட்சியைத் தக்க வைப்பதற்குப் பெரும்பாடு படுகின்றனர் ராஜபக்ஷக்கள். மூன்றில் இரண்டு பெரும் பான்மையோடு ஆட்சிக்கு வந்திருக்கிறோம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குத் தம்மை யாராலும் எதனாலும் அசைக்க முடியாது. தனிப் பெரும்பான்மை தமக்குண்டு. இனி எண்ணியதெல்லாம் கைகூடும். நினைத்ததை எல்லாம் செய்து முடிப்போம். இதற்காகவே நாம் அண்ணன் தம்பிகளாகவும் சித்தப்பா பெரியப்பாவாகவும் ஆட்சியமைக்கிறோம் என்றெல்லாம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டிருந்த ராஜபக்ஷக்களின் காலை வாரிவிட்டன கடந்த இரண்டு ஆண்டுகள்.

இந்த இரண்டு ஆண்டுகள் ஏன் இப்படிக் காலை வாரும் அளவுக்கு மாறின?

இதற்குக் காரணம் தலைக் கிறுக்குத்தான்.

இல்லையென்றால் மக்களின் நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, நாட்டை இராணுவ மயப்படுத்துவதற்குப் பகிரங்கமாகவே முயற்சித்திருப்பாரா? சிவில் நிர்வாகத்தை இராணுவமயமாக்கும் வகையில் படைத்தளபதிகளின் பொறுப்பில் பொறுப்பான பதவிகளை ஒப்படைப்பாரா? மருத்துவத்துறையில் கூட தீர்மானிக்கும் பதவிகளில் இராணுவ அதிகாரிகளை நியமிப்பாரா? இப்படியே தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்கிய ஜனாதிபதி கடைசியில் விவசாயிகளின் வாழ்க்கையிலும் கையை வைத்தார்.

விளைவு தொடர் போராட்டங்களை உருவாக்கியதாக முடிந்திருக்கிறது.

ஆசிரியர் சங்கப் போராட்டத்திலிருந்து மருத்துவர் சங்கப் போராட்டம், விவசாயிகள் போராட்டம் என முடிவற்ற பல போராட்டங்கள் இன்று உருவாகியுள்ளன. கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி பொதுமக்கள் கூடுவதையும் மக்கள் போராட்டங்களையும் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும் அதனால் அவற்றைக் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடியவில்லை.

இதெல்லாவற்றுக்கும் மேலும் தூண்டலை ஏற்படுத்தும் விதமாகக் கட்டற்ற முறையில் எகிறிச் செல்கிறது விலைவாசி. அரசாங்கம் எதையும் தீர்மானிக்க முடியாது என்ற நிலையில் தினமும் ஏறிச் செல்கின்றன பொருட்களின் விலை. அதை விடப் பொருட்தட்டுப்பாடு என்பது பெரிய பிரச்சினையாக உள்ளது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்குக் பொருட்களின் பதுக்கல் நடக்கிறது. பொருட்கள் பதுக்கப்பட்டால் செயற்கைத்தட்டுப்பாடு ஏற்படும். செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டால் விலை கட்டுப்பாடற்று ஏறும். இதைக் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துப் பார்த்தது. விலைக்கட்டுப்பாட்டை விதித்து, பதுக்கிய களஞ்சியங்களை கைப்பற்றியது. ஆனால் இதொன்றும் தீர்வாகவில்லை. இப்பொழுது விலைக்கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டியாகி விட்டது. அதாவது அரசாங்கத்தின் பிடி தளர்ந்து விட்டது.

இது மக்களுக்குப் பெரிய சுமை. பெரிய நெருக்கடி. பெரிய ஏமாற்றம். பெரிய தோல்வி.

இதனால் கடுப்பேறிய நிலையில் சனங்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

தொழில் வாய்ப்புகள் இல்லை. பொருட்கள் இல்லை. விவசாயத்துக்குத் தோதான உள்ளீடுகளில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்ற தெளிவு சனங்களுக்கும் இல்லை. அரசாங்கத்துக்கும் இல்லை. தலைவர்களுக்கும் இல்லை. ஜனாதிபதிக்கும் இல்லை.

அரசாங்கத்துக்கு தெளிவும் உறுதிப்பாடும் இருந்தால்தானே மக்கள் நிதானமாகவும் நிம்மதியாகவும் இருக்க முடியும்!

இதெல்லாம் ஏன் வந்ததென்றால், மாதன முத்தாக்களாக ராஜபக்ஷவினர் சிந்திக்க முற்பட்டதால் ஏற்பட்டதே!

இதை விடப் பரிதாபம் என்னவென்றால், இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாகக் கனவு கண்ட மாதன முத்தாக்களாகச் சிங்கள மக்கள் மாறியதே.

இப்பொழுது முட்டாள்களின் ராஜ்ஜியத்தில் முட்டாள் மக்களுமாக இலங்கை உள்ளது.

இதற்கு முடிவென்ன? அது எப்பொழுது?

இதற்கு எந்தத் தீர்க்கதரிசியிடமும் பதில் இல்லை.

ஆனால், இவ்வளவுக்கும் மத்தியில் அரசாங்கம் படைத்துறைக்கு - பாதுகாப்புக்குத்தான் அதிகமாக நிதி ஒதுக்கீட்டைச் செய்து வருகிறது.

இது நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது. ஆக மொத்தத்தில் இலங்கை மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டே போகிறது.

இதற்கான மெய்யான மீட்பர் யார்? ■

அகமது ஃபைசல்

# மரம் முளைத்தவன்



அவர் எப்போதும் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் முடிந்த பிறகுதான் ஊர் திரும்புவார். ஏனென்றால் அவர் செய்யும் தொழில் அப்படி. பக்கத்து ஊருக்குப்போய் அந்த ஊரில் இருக்கிற பெரிய சந்தையில் தனக்கான வியாபாரப் பொருட்களையெல்லாம் வாங்கி, ஒரிடத்தில் சேகரித்து அதை ஊரிலிருந்து வந்த அதே வாகனத்தில் ஏற்றி ஊருக்கு வந்து சேர வேண்டும். இவரோடு இன்னும் சில ஊர் வியாபாரிகள் இப்படித்தான் வியாபாரம் செய்கிறார்கள். சிலர் கருவாட்டு வியாபாரம், சிலர் வெற்றிலை பாக்கு, மரக்கறி என்று தெரிந்த வியாபாரத்தைச் செய்கிறார்கள். பழ வியாபாரம் செய்துதான் தன் குடும்பத்தைக் கரை சேர்க்கின்றார் இவர்.

தனது ஊரில் இருப்பவர்களில், ஒரு நாளைக்கு எத்தனை பேர் சினிமாப் பாடல்களை முணு முணுத்துப் பாடுகிறார்கள் என்ற கணக்கெடுப்பைச் செய்யும் ஒரு நிறுவனத்தில்தான் இவர் மகன் வேலை பார்க்கிறான். அவனுக்கு பகல் நேர வேலை. வேலை முடிந்து வீடு வந்து முகம், கை, கால் கழுவிக்கொண்டு சாப்பிட உட்காருவான். அப்போது அவன் அம்மா, அப்பா கொண்டு வந்த பலாப் பழத்தை வெட்டி சுளை சுளையாக எடுத்துப் பீங்கானில் வைத்து அதை மேசையில் வைத்திருப்பாள். நல்ல கூழன் பழம்தான் அவன் அப்பா எப்போதும் கொண்டு வருவது. பழத்தை எடுத்து அவன் சாப்பிடும்போது அப்பா சொன்னார் “மெதுவா சாப்பிடு பலாக் கொட்டைய விழுங்கிடாத தலையால முளைச்சி வந்துடும்” என்று சொல்லிவிட்டு மனைவியை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்.

அவர் சொன்னதுதான் சொன்னார் மறு நாள் காலை, தூக்கத்தை விட்டு எழுந்தவன் தலை உச்சியில் இரண்டு இளம் தளிர் இலைகள் வந்த வண்ணம் ஒரு பலாக் கன்று முளைத்திருந்தது.

மேகத்தை “நெருப்பு” என்றும் நெருப்பை “மேகம்” என்றும் பெயர் மாற்றம் செய்துள்ள அந்த ஊரில்தான் இந்தக் கதை இடம்பெறுகிறது.

அவன் தலை உச்சியில் பலாக்கன்று முளைத்திருப்பதை ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. வழமைபோல வேலைக்குத் திரும்பினான். தினமும் பலாக் கன்று வளர ஆரம்பித்தது. தலை உச்சியில் பலாக் கன்றுடன் அவன் காருக்குள் அமர்வதற்குச் சிரமப்பட்டான். முன்பைவிட அதிகமாக நீர் அருந்தினான். ஒரு தடவை தன் சகோதரியின் வீட்டுக்குச் சென்றவன் அதிகமாக நீரை வாங்கி அருந்தினான். சற்று நேரம் வாசலில் நின்றவனால் மீண்டும் கால்களை எறிந்து நடக்க முடியாமல் போயிற்று. அப்படியே பூமியில் வேர் பிடித்து நின்றுகொண்டிருந்தான். எதுவும் பேச முடியாதவனாக மாறினான். கொஞ்சம் கொஞ்சமாக அவனது உடல் முழுவதும் மண்ணுக்குள் மறையத் தொடங்கியது. அவன் சகோதரி கத்தினாள், கதறி அழுதாள் வேறெதுவுமே அவளால் செய்ய முடியாமல் போயிற்று.

அவள் வாசலில் இப்போதும் அந்தப் பலா மரம் பெரிய விருட்சமாகி நிற்கிறது. அந்த ஊரிலே முதலில் முளைத்த பலாமரம் என்ற பெயரும் அதற்கு உண்டு. பல வருடங்களின் பின் அந்தப் பலா மரம் காய்க்கத் தொடங்கியது. சாதாரணமான பருமனில் எல்லாக் காய்களும் காய்த்துத் தொங்கின. ஆனால் ஒரு காய் மட்டும் சாதாரண பருமனைவிட தினமும் பெரிதாகத் தொடங்கியது. ஈற்றில் அந்தக் காய் மட்டும் ஒரு மனிதனின் உயரத்திற்கு வளர்ந்து விட்டிருந்தது. அதை மரத்திலிருந்து பறித்து கீழே இறக்க அந்த ஊரே கூடியது.

இந்தப் பலாப்பழத்தை வெட்டினால் உள்ளிருந்து தலையில் மரம் முளைத்த அந்த மனிதன் வருவான் என்றே எல்லோரும் நம்பினார்கள். ஆனால் அவள் அந்தப் பலாப்பழத்தை ஒரு போதும் வெட்டுவதற்கு சம்மதிக்கவில்லை. ■

# இத்தனை மலர்களா? இத்தனையும் மலர்களா?

கே.எம்.செல்வதாஸ்



இந்த உலகில் வலிமை மிகு ஒற்றைச் சொல் இயற்கை. எண்ணற்ற ஆச்சரியங்களையும் விடைகாணமுடியாத கேள்விகள் பலவற்றையும் அது தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அத்தகு இயற்கையில் தோன்றிய உயிரிகளில் மனிதன் மகத்தானவன். காரணம், தன்னை உணர்வதோடு தன் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் ஆற்றலை அவன் கொண்டிருக்கிறான். அத்தகு மனித குலத்தின் ஆரம்ப காலகட்டங்கள் இயற்கையோடு ஒன்றிணைந்த- இயற்கையை தன்வசப்படுத்திய தன்மையுடையனவாகவே காணப்படுகின்றன. இயற்கையை வசப்படுத்தி ஆற்றல் மிகு வாழ்வை சங்கச் சான்றோர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அதற்கு சாட்சியாக சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன. அத்தகு சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நில மக்களின் காதல் வாழ்வை எடுத்தியம்புவதாக குறிஞ்சிப் பாட்டுக் காணப்படுகின்றது. குறிஞ்சி நில தலைவன் தலைவியர்க்கிடையிலான காதல் வாழ்வை அழகிய சொல்லோவியமாகத் தீட்டியிருக்கின்றார் கபிலர். அத்தகு புலவர் பெருமகன் இயற்கையோடு இயைந்த நுண்ணறியும் புலமைத்துவமும் மிக்கவராக மிளிர்ந்திருக்கின்றார் என்பதற்கு பாடலடிகள் பலவும் சான்று காட்டி நிற்கின்றன.

இன்றைய விஞ்ஞானயுக மாந்தர்களும் வியக்குமளவுக்கு இயற்கை சார்ந்த விடயங்களை நுண்ணிய பார்வையோடு சங்கச் செய்யுட்களில் இணைத்திருப்பது சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடிய விடயமல்ல. நின்று நிதானித்து நோக்குமிடத்து இத்தகு நுண்திறனை எப்படிப் பெற்றிருந்தார்கள் எம்முன்னோர்கள் என்ற கேள்வி எம் முன்னே எழவே செய்கின்றது. அதற்கான விடையைத் தந்து நிற்கின்றன அவர்தம் வாழ்வியல் முறைகள். அவர்கள் இயற்கையை நேசித்ததோடு மட்டுமல்லாமல் அதன் ஓர் அங்கமாகவே தம்மை தகவமைத்துக் கொண்டனர்.

ஆதலால் இயற்கையும் தன்னுள் பொதிந்து வைத்திருந்த சூட்சுமங்களை அவர்களது புலன்களுக்கு வழங்கலாயிற்று. ஆகையினால் அவர்கள் இயற்கையாகவே நுண்திறனுடையவர்களாயினர். ஆனால் இன்றோ இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான இடைவெளிகள் நீண்டு கொண்டே செல்கின்றன. ஆதலினால் இயற்கையின் இரகசியங்களை ஆய்வுகள் செய்தே அறிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

குறிஞ்சிப் பாட்டில் **61** ஆவது வரியிலிருந்து **96** ஆவது வரி வரையிலான முப்பத்தாறு வரிகளில் தொண்ணூற்று ஒன்பது பூக்களைப் பட்டியலிட்டிருக்கின்ற பாங்கு தாவரவியல் அறிஞர்களுக்கும் ஆச்சரியம் தரத்தக்க அரிய செய்தியாகும். இந்தப் பூக்களில் பல காலையில் மலருவன. சில மாலையில் பூப்பன. சில இரவில் கமழ்வன. சில மாலையில் விரிவன. சில மருவில் அலர்வன என்று பல நிற- நிற- நிலத்துப் பூக்கள். எனினும் அவை எல்லாம் ஒரு கலிவாக்கில் ஓரிடத்தில் தமிழில் கொட்டிக்கிடப்பது குறிஞ்சிப் பாட் டில்தான். “இத்தனை மலர்களா? இத்தனையும் மலர்களா?” என்று படிப்பவர் திகைக்கக் கபிலர் பெருமான் ஒரு மலர்க் கண்காட்சியையே குறிஞ்சிப்பாட்டில் படிப்பவர் காணப் படைத்திருப்பது பழந்தமிழர் சிந்தனை வளத்துக்கும் செந்தமிழ்ப் புலமைக்கும் சரியான சான்றாகும்.

வன் இதழ் / ஒண் செங் காந்தன், ஆம்பல், அளிச்சம் / தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி / செங்கோடு வேரி தேமா மணிச்சிகை, / உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் கூவினம்

ஏரி புரை எறுழம் சுள்ளி கூவிரம் / வடவனம் வாகை வான்பூங் குடசம் / எருவை செருவிகளை மணிப்பூங் குருவினை / பயினி வானி பல் இணர்க் குரவம் / பசும் பிடி வகுனம் பல் இணர்க் காயா

விரி மலர் ஆவிரை வேரல் சூரல் / குரீகிப் பூளை குறு நறுங் கண்ணி / குருகிலை மருதம் விரி பூங்கோங்கம் / போங்கம் திலகம் தேங்கமழ் பாதிரி / செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகம்

கரந்தை குளவி கடிகமழ் கலி மா / தில்லை பாலை கல் இவர் முல்லை / குல்லை பிடவம் சிறு மாரோடம் / வாழை வள்ளி நீள் நறு நெய்தல் / தாழை தனவம் முள் தான் தாமரை / ஞாழல் மௌவல் நறுந் தண் கொருடி / சேடல் செம்மல் சிறு செங்குரவி / கோடல் கைதை கொங்கு முதிர் நறுவழை / காஞ்சி மணிக்கலைக் கள் கமழ் நெய்தல் / பாங்கர் மராஅம் பல் பூந் தணக்கம் / ஈங்கை இலவம் தூங்கு இணர் கொன்றை / அரும்பு அமர் ஆத்தி நெடுங்கொடி அவரை / பகன்றை பலாசம் பல் பூம் பிண்டி / வஞ்சி பித்திகம் சிந்து வாரம் / தும்பை துழாஅய் சுடர்பூந் தோன்றி

நந்தி நறவம் நறும் புன்னாகம் / பாரம் பீரம் பைங் குருக்கத்தி / ஆரம் காழ்வை கடி இரும் புன்னை / நரந்தம் நாகம் நள்ளிருள் நாறி / மா இருங் குருந்தும் வேங்கையும் பிறவும்

அரக்கு விரித்தன்ன பரு ஏர் அம் புழுகுடன் / மால் அங்கு உடைய மலிவனம் மறுகி / வான் கண் கழீஇய அகல் அறைக் குவைகி

இத்தகு பாடலிலே ஒவ்வொரு மலரின் வருணனையும் அதற்குத் தரும் அடைமொழியும் கபிலருக்கே உரிய கவித்திறனுக்கு கட்டியம் உறுகின்றன.

இத்தகு நுண்திறனுடைய மனிதர்களாக நாமும் மாற இயற்கையை நேசிப்போம்.

“மனிதர்களுக்குப் பாடஞ் சொல்ல இயற்கை
எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றது
கற்றுக் கொள்ள மனித மனங்கள் தான் மறுக்கின்றன
ஆற்றலின் அகந்தையை அடக்க
தானே வலியது என்பதை மறுபடியும் மறுபடியும்
நிரூபித்துக் கொண்டேதான் இருக்கின்றது
இயற்கை.”

புதுப்புனல் 17

புலோலியூர் வேல்நந்தன்

# காரைக்கவி கந்தையா பத்மானந்தனின்

# ஆனந்தனும் அவவும்...

## (சுருக்கக் கதைத் தொகுதி)




ஈழத்துத் தமிழ்ப் படைப் புலகம் காலத்துக்குக் காலம் அபூர்வமான படைப்பா ளிகளை இனங்கண்டு கொள்கி றது என்ற அடிப்படையில் மிக அண்மைக் காலத்தில் முகநூல் வெளிவழி வெளிப்பட்டு ஒரே நேரத்தின் தன்னுடைய பத்து வகையான படைப்புப் பிரதிகளை வெளியிட்டுப் பலரது கவ னத்தை பெற்றிருப்பவரே காரை நகர் மண் தந்த காரைக்கவி கந் தையா பத்மானந்தன். பதவி நிலை கருதி இவர் அதிக காலம் கொழும்பிலேயே வசிக்கிறார். தாய்ப்பாசமும் ஊர்ப்பற்றும், மண் வாசனையும், நகைச்சுவை உணர்வும் நிரம்பப் பெற்றவர். எல்லோருடனும் எந்தவித வேறு பாடும் இன்றிப் பழகக் கூடிய வர். அன்றாடம் அவரது முகநூற் பதிவுகள் வழி பல்லாயிரக்கணக் கானவர்கள் நட்பு வட்டத்தால் விரும்பப்படுபவர். கல்வி அமைச் சின் பொறியியல் பிரிவில் கட மையாற்றியவர். “சீத்துவக் கேடு” என்ற பெயரில் தமிழன் பத்திரிகையில் தொடராக எழுதும் பத்தி எல்லோராலும் விரும்பப்படுவது.

இந்த வகையில் இவரால் வெளியிடப்பட்ட ஏனைய படைப்புப் பிரதிகளாக அம்மா எனும் ஆசியாவின் அதி சியம், நீயிருக்கப்பயமேன், என்னடா மோனை, என்னத் ததைக் கிழிக்க, என்னமோ, இருக்கிறம், குறுக்கால போவாரே, கோதாரி விழுவாரே, தமிழ் வளர்த்த மானி டம், தமிழ் வேதம் தந்த கணபதி, திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதில் ஒன்றாகிய ஆனந்தனும் அவவும் என்ற சுருக்கக் கதைத் (குறுங்கதை) தொகுப்பைத் தீம்புனலின் புதுபுனல் வழி அறிமுகம் செய்வதில் மகிழ்வடைகிறேன். இது அம் மாத்தை வெளியீட்டகம், அனுபவப் பதிப்பகம் வெளி யிட்ட நூல் எனக் குறிப்பிடுவதன் மூலம் அதிலும் நூலாசிரியரின் புரட்சிச் சிந்தனையைக் காணமுடிகிறது.




இன்று நீண்டு கதை சொல்லும் முறைக்கு மாற்றாகக் குறுகிய கதைகளும் வாசகர் மத்தியில் அதிக செல் வாக்கைப் பெற்று வருவதைக் காணலாம். சாந்தனின் கடுகுக் கதைகள் முதல் அண்மைய வேல் அமுதனின் கதைகள் வரை சான்று சொல்ல முடியும். இந்த வரிசை யில் பேச்சு வழக்கு மொழி, கிராமிய வாழ்வு, குடும்பச் சிக்கல்கள், யதார்த்தம், நகைச்சுவை என்பன கலந்து வெளிப்படும் குறுங்கதைத் தொகுதியாக காரைக்கவி யின் இத் தொகுப்பு அமைகிறது. சண்டையும் சமாதான மாகவும் வாழும் அத்தனை தம்பதிக்கும் இக் கதைத் தொகுதியை இவர் சமர்ப்பித்துள்ளார். முன்னுரைக் குறிப்பாக கதாசிரியர் குறிப்பிடும் போது “இடம் பெயர்வு, ஏதிலி வாழ்வும், பல்லின, மத, மொழிப் பண் பாட்டு மக்களுடனான தன் உறவும், பணித் தொடர்பும் அவர்கள் மத்தியில் வாழ்ந்து பெற்ற வாழ்வியல் அனுபவங்களுமே இது போன்ற படைப்புக்களை எழுத வைக்கின்றன.” எனக் கூறியுள்ளதுடன் சுருக்கக் கதை களை எழுதும் போது வழமையாக சிறு கதைகளை எழுதும் முறையில் இருந்து விலகி முன்னணி, பின்னணி விபரங் களைத் தவிர்த்தே எழுத முயன்றுள்ளேன். நான் கண்டு கேட்டதை, சாதாரண குடும்ப வாழ்வோடு இணைத்து, சுருங்கக் கதைகளாய் தந்துள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

இவரது “ஆனந்தனும் அவவும்” என்ற இக் கதைத் தொகுதிக்குள் நுழைந்தால் “கனவு” முதல் “முருங்கைக்காய்” ஈறாக ஐம்பத்தொரு சுருக்கக் கதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதை களும் குடும்ப வாழ்வின் வெவ்வேறுபட்ட தரிசனங்களாய் அமைந்து எம்மை சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றன. பேச்சு வழக்கு மொழியாய் அவை எம் மனதைத் தைக்கின்றன. பெருமளவான கதைகள் அரைப் பக்கம் முதல் ஒரு பக்கத்திற்குள் முடிந்து போகும் கதைகளாகவே அமைந்துள்ளன. வழமை யான சிறுகதைப்பாணிகளின் இருந்து முற் றிலும் வேறுபட்டதோடு வாசக அனுப வத்தை இவை தருகின்றன. அவரே குறிப்பிடுவது போல் சிலருக்கு இக் கதைகள் பிடிக்காமலும் போகலாம். ஆனாலும் அவரது இப் புதுமையான கதை சொல் முயற்சி பாராட்டுக்குரியது.

“கனவு” என்ற கதையில் ஆனந்தன் - சித்திராவுக்கிடையிலான ஊடலும் கூடலும் காட்டப்பட்டு ஆனந்தன் கண்ட கனவும் சித் திரா தன் மகனை ஸ்கொலசிப் ரியூசனுக்கு சேர்க்கக் கண்ட கன வும் ஒட்டு மொத்தத்தில் பிள்ளை களின் கல்விக்காய் பெற்றோர் காணும் கனவு என்ற அடித்த ளத்தில் கதைக்குள் கதைகள் பல சொல்லப்பட்டுள்ளமையும் இஞ் சாருங்கோ, நரகத்தில் முள்ளு, அந்தரிச்சுக் கொண்டு நிக்கிறன்... என்ற பேச்சு வழக்கு மொழிக் கையாளுகைச் சிறப்பு கதையின் முடிவுதான் கதையை தூக்கி நிறுத்துகிறது.

வீட்டிலே மூக்கு முட்டச் சாப்பிட்டுவிட்டுக் கழக உண் ணாவிரதத்திற்குச் செல்லும் முரணை “உண்ணாவிரதம்” எனும் கதை உணர்த்துகிறது. “அடுத்த வீட்டில் பூசை” என்ற கதை வாழும் காலத்தில் கிழவியைச் சரியாகக் கவனிக்காமல் அவள் செத்தபின் செத்தவீட்டுக்கு வராமல் பின்னர் ஆறாம் மாதப் பூசை செய்ய முனை யும் போலி வெளிநாட்டு உறவுக ளின் முகங்களை தோலுரித்துக் காட்டுகிறது. வெள்ளவத்தைச் சந்தையிலை அதிக விலைக்கு மனைவி கத்தரிக்காய் வாங்கிய சம்பவத்தை நகைச்சுவையோடு சொல்வதற்காக “சந்தை” என்ற கதை அமைந்துள்ளது. “வாத்தி யார்” என்ற கதையில் நாம் எமது ஆசான்களை கனம் செய்தால் எமது பிள்ளைகளும் அதனைப் பின்பற்றுவர் என்பதை கோயில் தேர்த் திருவிழாச் சூழலில் வைத்துக் கூறி குருவே தெய் வம் என்பதை உணர்த்தியுள்ள தன்மை சிறப்பு. சீனி பதுக்கி விற்கும் நிலையை “பதுக்கல்” என்ற கதை எடுத்துக்காட்டுகிறது. எல்லாக் கதைகளிலும் ஆனந்தனும் அவனது மனைவி யான சித்திராவும் கதை மாந்தர்கள். அவர்களுக்குள் நடக்கும் உரையாடலாகவே கதைகள் சொல்லப்பட்டுள்ளன.

“வேட்டி” என்ற கதை கோயிலுக்குள்ளேயும் செக் பண்ணிப் போகும் காலக் கொடுமையை நாலுமுழ வேட்டி என்ற நகைச்சுவை வழி பதிவு செய்கிறது. “அடி யார்” என்ற கதை விழாவுக்கு பிரதம விருந்தினராய் வந்த சைவ அடியார் செருப்பைக் கழட்டாமலே திருநீறு பூசிய முரணைப் பேசுகிறது. “பிரசங்கம்” என்ற கதையும் இதே மாதிரியான முரணையே பேசுகிறது. “பாராட்டு” என்ற குறுங்கதை பேப்பரில் பாராட்டி வாழ்த்து போடும் பண்பாட்டை கேலி செய்வதாக அமைந்துள்ளது. “கொழுக்கட்டை” என்ற கதை ஆடிப்பிறப்புக்கு கூகுளில் தேடிக் கொழுக்கட்டை நிலையைச் சொல்லுகிறது. “அப் டேட்ஸ்” என்ற குறுங்கதை இன்றைய தொடர்பாடல் யுகத்தில் எல்லா அனுபவங்களையும் Face book இல் பகிரும் நிலையைக் கிண்டல் செய்வதாக அமைந்துள் ளது. “அருச்சனை” என்ற கதை எல்லாம் பணத்துக்கு விலை போன நிலையை எடுத்துக்காட்டுகிறது. “பூசை” என்ற கதையில் கோயில் பூசைக்கு ஆறுதலாக வெளிக் கிட்டு வர ஐயர் பூசையை முடிச்சு அடுத்த கோயில் பூசைக்கு அவசரமாய்ப் போக கோயிலைப் பூட்டும் நிலை சமூக யதார்த்தமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. “பேஸ் புக்” என்ற கதை படிக்கிற எண்ணம் இல்லையோ என்ப தற்கு முகம் கழுவி கடவுளை வணங்கி கதிரையில் பேஸ் புக்கில் திறந்து படிக்கும் மகளின் நிலையை எடுத்துக் காட்டியுள்ளது.

இது போல “நாய்” என்ற கதை அங்கதச் சுவை கொண் டதாய் அமைந்து சிறப்புப் பெறுகிறது. “மயிர்” என்ற கதையும் அவ்வாறே அமைகிறது. “முருங்கைக்காய்” என்ற கதையில் எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கத் தயாராக இருக்கிற வெளிநாட்டுக் காரரை உள்ளூர் மக் கள் படும்பாட்டைக் கூறுகிறார். இதே போல இக் கதை களில் கையாண்டுள்ள உவமைத் தொடர்களும் சிறப்பாக உள்ளன. தண்ணியில் விழுந்த சோடியம் மாதிரி, மட் டைகாலுக்கை மாட்டின பெட்டை நாய் மாதிரி, அப் பத்தான் பியூட்டி பார்லறால வந்த பொம் பிளையள் மாதிரி, கொதிக்கக் கொதிக்க ஊத்தின கோப்பி மாதிரி என் பவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட லாம். ஒரே வகையாள பாத்திர உரையாடல்களாக எல்லாக் கதைக ளும் அமைவதால் வாசிக்க, சலிப்பைத் தந்தாலும் அதைச் சொன்ன முறைகளும் மொழியும் நகைச் சுவையும் அதனை போக்க உதவுகின்றன எனலாம். இத்தகைய பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளியிடம் இருந்து இன்னும் அனு பவம் மிக்கக் கதைகளை எதிர் பார்த்தபடி அவரது இத் தொகுப்பைப் புதுப்புனலில் அறிமுகம் செய்ததில் அக மகிழ்கிறேன்.

■

இந் நவீன உலகத்தில் சமூக ஊடகங்களின் பயன்பாடு இன்றி மனிதர்கள் வாழ்வது அபூர்வமாகிவிட்டது. சமூக ஊடக பாவனையானது ஒருவரின் தனிப்பட்ட கருத்துக்களை, எண்ணங்களை வெளிக்கொண்டு வரவும் எவ்வித தடையுமின்றி சுதந்திரமாகச் செயற்படவும் வழிவகுக்கின்றது. ஆனால் இந்த சுதந்திரத்தை எத்தனை பேர் சரியான முறையில் பயன்படுத்துகிறார்கள் எனும் போது அதற்கான பதில் வேதனைக்குரியதாகின்றது. இதில் பெண்களின் நிலை இன்னும் மோசமாக உள்ளது.

நேரடி சமூகச் சூழலில் நிலவக்கூடிய அதே நிலைப்பாடுதான் சமூக ஊடகங்களிலும் பெண்களுக்குக் காணப்படுகின்றது. சமூக ஊடகங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பேச்சுக்கள், ஒரு பெண்ணின் தனிப்பட்ட விடயங்களை பேசுதல், தவறான சித்தரிப்புகள், பால்நிலை சமத்துவமின்மை என வன்முறைகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. தற்காலத்தில் மாத்திரமன்றி சமூக ஊடகங்கள் உருவாக்கப்பட்ட காலங்களில் இருந்தே சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிலவுகின்றமைக்குப் பல சான்றுகள் உள்ளன.



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சமூக ஊடகங்களில் தொடரும் பெண்களுக்கெதிரான வன்முறைகள்

2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சமூக ஊடகங்களை, சுமார் 300கோடி பேர் பயன்படுத்தி வருவதாகவும் இந்த எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்ததாகவும் ஒரு நிமிடத்திற்கு 11 புதிய நபர்கள் சமூக ஊடகங்களில் இணைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதிலும் Facebook, Whatsapp மற்றும் Twitter ஆகியவற்றைப் பலரும் பயன்படுத்திவருகின்றனர். இவற்றில் தங்களுக்குத் தேவையான பல்வேறு தகவல்களை பெற்று வருகின்றனர். மற்றொரு புறம் சமூக ஊடகங்களின் வளர்ச்சியால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு சாற்றுரை 'காலங்காலமாய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமனில்லாச் செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்' எனக் கூறுகிறது.

சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான எதிர்மறை அனுபவங்களில் பாலியல்வசை, உடல் ரீதியான விமர்சனங்கள், பகடிகள், தவறாகச் சித்தரித்தல் போன்றவை பெண்கள் வழக்கமாக எதிர்கொள்பவையாகின்றன. முதன் முறையாகத் தாக்கப்படும் போது பல பெண்கள் சமூக ஊடகங்களிலிருந்து கணக்கை மூடிவிட்டு கிளம்பிவிடுகின்றனர். ஏனெனில் பொது வாழ்க்கைக்கு வரும் பெண்கள் தங்களது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

பெண்ணுக்கான பெயர் பாலியல் ரீதியாகச் சிதைக்கப்படும் போது அது அக்குடும்பச் சூழலை பெரிதும் பாதிக்கும் காரணியாக உள்ளது. திருமணமாகாத பெண்கள் எனில் அவர்களது தாய் தந்தையை பாலியல் ரீதியாகத்திட்டுவது, குடும்பப்பெண் எனில் அவள் சுய ஒழுக்கத்தைக் கேள்விக் குறியாக்குவது என்று இங்கு பாலியல் ரீதியான தாக்குதல்கள் ஏராளம்.

இதைச் செய்பவர்கள் பெரும்பாலும் முகம் மறைத்துத் தாழ்வுணர்வில் போலிக்கணக்குகளில் இயங்கிவருபவர்கள். இவர்கள் ஏதேனும் ஒரு பெண் சுதந்திரமாக ஏதாவது கருத்தை முன்வைத்தால் அந்தக் கருத்தைநோக்கி எதிர்விவாதம் வைக்கமாட்டார்கள். உருவகேலி, ஒழுக்கப்பகடி வசைகள் முதலியவற்றில் ஈடுபட ஆரம்பிப்பார்கள். இதைப் போல் ஒரு பெண் இரவில் அதிக நேரம் சமூக ஊடகத்தில் இயங்கினாள் அவளை தவறான கண்ணோட்டத்தில் பார்த்தல். இதற்குத் தீர்வாக ப்ளாக் செய்து விடுங்கள் என்கிற அறிவுரைகளைப் பொது வெளியில் கேட்கலாம். நாம் ப்ளாக் செய்வதால் அந்தப் போலிக்கணக்கர் அமைதியாகி விடப்போவதில்லை என்பதே நிதர்சனம்.

> **"சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான எதிர்மறை அனுபவங்களில் பாலியல்வசை, உடல் ரீதியான விமர்சனங்கள், பகடிகள், தவறாகச் சித்தரித்தல் போன்றவை பெண்கள் வழக்கமாக எதிர்கொள்பவையாகின்றன. முதன் முறையாகத் தாக்கப்படும் போது பல பெண்கள் சமூக ஊடகங்களிலிருந்து கணக்கை மூடிவிட்டு கிளம்பிவிடுகின்றனர். ஏனெனில் பொது வாழ்க்கைக்கு வரும் பெண்கள் தங்களது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது."**

நவம்பர் 2017 இல், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட எட்டு நாடுகளில் உள்ள சமூக ஊடகத் தளங்களில் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல் அனுபவங்கள் குறித்து அம்னஸ்டி இன்டர்நேஷனல் ஆன்லைன் கருத்துக் கணிப்பை நியமித்தது.

இதன் மூலம் சமூக ஊடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்குப் பல சான்றுகள் கிடைக்கப்பெற்றன. இதனடிப்படையில் இங்கிலாந்தின் கவிஞரும் நடிகருமான 'டிராவிஸ் அலபன்சா', எழுத்தாளர் 'டேனியல்டாஷ்', பத்திரிகையாளர் 'அலிசன்மோரிஸ்' அமெரிக்க இனப்பெருக்க உரிமை ஆர்வலர் 'பமீலாமெரிட்' அமெரிக்க ஊடகவியலாளரும் எழுத்தாளருமான 'ஜெசிகாவலெண்டி' ஆகியோர் தமது சமூகவலைத்தள வன்முறை தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

இளம் பிரிட்டிஷ் நடிகை எம்மா வாட்சன் ஐ.நா மன்றக் கூட்டம் ஒன்றில் பாலின சமத்துவம் குறித்துப் பேசியபோது அவர் தன்னை உலகளாவிய கும்பல் ஒன்றின் தொடர் தொந்தரவுக்கு இலக்காவோம் என்று நினைத்திருக்கமாட்டார்.

இவர்களைப் போன்று சமூகவலைத்தள வன்முறையை அனுபவித்த பல பெண்களை இவ் அம்னஸ்டி இன்டர்நேஷனல் ஆன்லைன் (Amnesty International's online) ஆய்வின் மூலம் இனங்காணப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் சமூகவலைத் தளங்களில் ஏற்படக்கூடிய பெண்களுக்கெதிரான வன்முறைகளில் மூன்றாம் பாலின பெண்களும் பல்வேறு வன்முறைச் செயல்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இன்றைய காலத்தில் மூன்றாம்பாலினர் ஒவ்வொரு துறைகளிலும் சாதித்து வருகின்றனர். இவர்களின் சாதனைகள் பற்றி பேசக்கூடிய சமூக வலைத்தளங்கள் இவர்களின் பாலினத்தைக் காரணம் காட்டி சமூக வலைத்தளங்களில் அவர்களை பற்றி இழிவாகப் பேசுவதன் மூலமும், தவறான கருத்துக்களை, காணொளிகளை வெளியிடுவதன் மூலமும் மூன்றாம் பாலின, பெண்களை சமூக வலைத்தளங்களில் வன்முறைக்குள்ளாகுகின்றனர்.

இதற்குச் சான்றாக அமெரிக்க, எழுத்தாளர் 'ராணி பேக்கர்' மேடையில் ஒரு மூன்றாம் பாலின பெண்ணாக ட்விட்டரில் அனுபவிக்கும் துஷ்பிரயோகம் குறித்து கூறியுள்ளார்.



இணையம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக, இருக்கிறது அதேபோலத்தான் அதனுடன் இணைந்து வரும் வன்முறையும். உலகெங்கும் ஏற்கனவே பல கோடிக்கணக்கான பெண்கள் அவர்கள் பெண்களாக இருப்பதனாலேயே வீட்டிற்குள் நடக்கும் பாலியல் ரீதியான வன்முறைக்கு இலக்காகிறார்கள்.

தற்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி என்பது அத்தகைய வன்முறையைச் செய்ய புதிய வழிகளைத் தந்துள்ளது. இணைய வெளியில் இது போன்ற மோசமான நடத்தைகளில் 95 சதவீதம் பெண்களை நோக்கியதாகவே இருப்பதாக ஐ.நா கணிக்கிறது.

இணையம் சுதந்திரத்தைத் தரும் என்று முதலில் வந்த சாதகமான உறுதிமொழிகளை எல்லாம் இந்த இணையவெளி வன்முறைகள் குலைத்துவிட்டது என்பதைச் சமூக ஊடகங்களில் ஏற்படும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் உணர்த்து கின்றன.

■

# கொரோனாப் பெருந்தொற்றும் மூலிகை உணவு சுக வாழ்வும்


டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

சித்த மருத்துவத்தில் உணவே மருந்து என்பது முக்கியமானது. நோய் ஏற்படாது காக்கும் நோயில்லா நெறியிலும், நோயைக் குணப்படுத்து வதிலும் நோய் தீவிரத்தைத் தணிப்பதிலும், நோயினால் இழந்த ஊட்டச்சத்தை மீள கொடுப்பதிலும் மூலிகை உணவு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மூலிகை உணவில் அதீத நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் தன்மை (Immense Immunity Enhancing medicina value of herb based food) காணப்படுகின்றது. தொன்மையானதும் முழுமையானதுமான சிகிச்சை (the oldest form of holistic treatment) முறைகளைக் கொண்ட சித்த மருத்துவத்தில் உணவாகப் பயன்படும் இஞ்சி (Ginger), உள்ளி (Garlic), வெங்காயம் (Onion), மஞ்சள் (Turmeric), மிளகு (Pepper),



தேன் (Bees Honey) போன்ற பல உண வுப் பொருட்களில் நோய் எதிர்ப்புச் சக்தி மேம்படுத் தும் (Boost Immunity) தன்மை காணப்படுகின்றன.

உழுத்தங்களி, வெந்தயக்களி, ஓமக்களி என்ப னவற்றுடன் இஞ்சி, மஞ்சள், தேனீருடன் மிளகு, புதினா, இலவங்கப் பட்டை சேர்த்துக் குடிக்கலாம். சித்த மருத்துவத்தில் அறுசுவை உணவின் முக்கியத் துவம் வலியுறுத்தப்படுகின்றது. ஆறு சுவையுள்ள உணவுகளை உட்கொள்ளும் போது எல்லாப் போச ணைப் பொருட்களும் கிடைத்து சமநிலை உணவாக நோய் வராமல் தடுக்கும் உபாயமாகத் திகழ்கின்றது. பழஞ்சோறு புதியநோய்த் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதுடன் அதில் அமினோ அமிலங்கள் (Amino acids) நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதுடன் ஊட்டச் சத்து அகத்துறிஞ்சும் இயல்பு கிடைக்கும் தன்மை (Bio Availability) அதிகரிப்பதுடன் சுக்கு மல்லி சிற்றரத்தை தேனீரானது அழல் ஐயம் குறைப்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கும். உழுத்தங்கஞ்சி, மிளகுக் கஞ்சி, மஞ்சள், மிளகு, கல்லாக்காரம் சேர்ந்த பால், பூண்டுப் பால் போன்றவற்றை எடுக்கும் போது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

மகாப் பெருந் தொற்றான கொரோனாவை வாதகப சுரம், விஷம சுரம், சன்னி பாத சுரத்துடனும் ஒப்பிட்டு ஆராய்வது அவசியம். இயற்கை வழியில் இயற்கை உணவுகளுடன் வாழுதல் (Naturel way of living with natural food) மரபு சார் பாரம்பரிய இயற்கை உணவானது (Natu ral traditional diet) போசனை மிகுந்த உணவாகக் (Nutriti ous Diet) காணப்படுகின்றது. அதிகளவு வெந்நீர் குடிப்பது அவசியம்.

பழம், பச்சைக்காய்கறிகள், பச்சிலைமூலிகைகள், கீரை, பால், மோர், மிளகு ரசம், கொள்ளு ரசம், தூது வளை சூப், இஞ்சிச்சாறு, தேன், கம்பு, திணை, கேழ்வரகு, சாமை என்பவற்றின் கஞ்சி, பயறு, மிளகு, சீரகம், இஞ்சி சேர்த்து செய்யப்பட்ட, இயற்கை பசளை இட்டு வளர்க் கப்பட்ட பாரம்பரிய நெல் இனத்தால் செய் யப்பட்ட வெண் பொங் கல் பூண்டு, சீரகம், மிளகு, மஞ்சள் சேர்த்து செய்யப்பட்ட உணவு கள், அதிகளவு உயிர் சத்து C கொண்ட நெல்லிக்கனி போன் றன உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப் பதுடன் நோய் வராமல் தடுக்கும் உணவுகளாகக் காணப்படுகின்றன. பூண்டு, சுக்கு, மிளகு, திப்பலி, மஞ்சள் என்பன முக்குற்ற திரிதோட சமநிலைப் பொருளாகக் காணப்படுகின்றன.

மூலிகைக் குடிநீர், மூலிகை சூப், மூலிகைக் கஞ்சி, மூலிகைக் தேநீர், ராகித் தோசை, ராகி இட்லி, முருங்கை இலை சூப், சிறுதானியக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, பருப்புக் கஞ்சி, சுக்குக் கஞ்சி, கொள்ளுக் கஞ்சி, கொள்ளு ரசம் என்பன நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும். நார்ப் பொருள் உள்ள உணவுகளில் நாகச் சத்து (Zinc) உண்டு. கரும்பச்சை மூலிகைகளில் பைற்றோ நியூற்றியன்ட் (Phyto Nutrient) உண்டு. தயிரில் 30000 கிருமிகள் காணப் படுகின்றன. வெல்லம், ஏலப் பொடி சேர்த்து செய்யப்படும் பானகம் நன்று. உணவில் மஞ்சள் பொடி சேர்க்கும் போது பற்றீரியாவிற்கு எதிராக (Anti bacterial), வைரசிற்கு எதிராக (Antiviral), ஒட்சிநெதிரியாகத் (Antioxidant ) ஆகத் தொழிற்படும் சிறு பருப்பு, துவரம் பருப்பு, உழுந்து, பயறு, கடலை, சுண்டல், உழுந்து அப்பளம், உழுத்தம் கஞ்சி, ஓமக்கஞ்சி, தயிரினுள் கடுகு கருவேப்பிலை சேர்த்து தாளித்த உணவு , மிளகு, சீரகம், சேர்ந்த சூப், மாதுளம்சாறு, இஞ்சித் துவையல், இஞ்சி சம்பல், உப்பு சேர்ந்த எலுமிச்சை சாறு என்பன நன்று. நெய் உணவில் சேர்க்கும் போது நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும். இரசத்தில் மிளகு, மஞ்சள், சீரகம், கருவேப்பிலை சேர்வதால் நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டும். கடுகு, மிளகு, சீரகம், வெந்தயம் என்பவற்றில் நாகச் சத்து (zinc) இருப்பதால் அது நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். தூய மல்லி, கருடன் சம்பா என்ற பாரம்பரிய நெல்லினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். கொரோனா நோயாளிகளில் வழங்கப்படும் கபசுரக் குடிநீரில் இரும்புச் சத்து, செலெனியம், கல்சியம், நாகச் சத்து போன்ற ஊட்டச்சத்துக்கள் இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும்.

காலப்பழமையும் சாலப்பெருமையும் கொண்ட சித்த மருத்துவத்தை மருத்துவ ஞானம், மருத்துவப்புல மை, மருத்துவ அறிவு கொண்ட சமூகத்தில் இருக்கும் சான்றோர்களையும் முழுமையாக அரவணைத்துச் சமூக நோக்குடன் யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை செயற்பட்டால்தான் அதனது உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் அல்லது சமூகத்திலிருந்து விலகிநிற்ப தாக அமைந்து விடும். வைத்திய கலாநிதி பூ.உரோம கேஸ்வரன், வைத்திய கலாநிதி அ.வி.இராசரத்தினம் போன்ற மருத்துவ ஞானம் மிக்க சித்த மருத்துவர்களுக்கு அவர்கள் இறக்கும் வரை “மதிப்புறு முனைவர்” வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமை கவலைக்குரியதாகும்.

(வளரும்.......)

மூலிகை சுக வாழ்வு நிறுவனம்
கிளவ் வீதி, தெல்லிப்பளை

# மென்திறன்களைக் கட்டியெழுப்பும் அழகியற் பாடங்கள்

த.அபிநாத்

பாடசாலை என்பது புள்ளிப் பெறுபேறுகளை மட்டுமே உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அல்ல. சமூகத்திற்கு ஏற்ற பிரஜையினை உருவாக்குவதிலே தான், கல்வி வெற்றிக்குரியதாக மாற்றமடைகின்றது. தேசிய கல்விக் குறிக்கோளும் நிறையாளுமையாளரைச் சமூகத்திற்கு வழங்குவதையே அடிப்படையாகக் கொண் டுள்ளது. மீ அறிகையில் பன்முக அம்சங்களின் வகிபா கத்தை இனங்காண்கிறோம். மாணவர்களை நோக்கிக் கல்வியானது கலைத்திட்டம் ஊடாகவே நகர்த்தப்படு கின்றது.

தேர்வில் உயர்புள்ளிகளையோ, கருவிகளின் கையா ளுகையினையோ, இன்னொரு மொழி அறிவினையோ பெற்று விடுவதால் மட்டுமே மாணவன் ஆளுமையா ளனாக மாறிவிடமாட்டான். இவ்வாறான வன்திறன் களோடு மென் திறன்களும் வந்தமைய வேண்டும். மோதுகையினைத் தவிர்க்கும் ஆற்றலைக் கொண்ட வனே, சமூகத்தோடு ஒத்தோடக் கூடியவனாக அமைவான். அண்மைக்காலத்தில் கற்றலின் தேறிய விளைவாக நேர்மை, வசீகரிக்கும் திறன், நேர முகாமைத் துவம், இடர் முகாமைத்துவம், தலைமைத்துவம், புத் தாக்கத்திறன், தொடர்பாடல் திறன், குழு ஒருங்கிணைவு போன்றனவும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின் றன. தொழில் வழங்குநர்களும் இத்தகைய மென்திறன்க ளையே எதிர்பார்க்கின்றனர். எனவே மென்திறன்களை மையப்படுத்திக் கலைத்திட்டங்கள் வடிவமைக்கப்படு கின்றன. சில பாடங்கள் அதிகளவிலே மென்திறன்களை விருத்தி செய்யும் வகையிலே அமைகின்றன. இந்த வகை யிலே அழகியற் பாடங்கள் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றன. ஏனைய பாடங்களுக்குக் கொடுக்கின்ற முன்னுரிமையினை இப்பாடங்களுக்கும் மாணவர்கள் வழங்க வேண்டும். அழகியற் பாடங்களையும் கவனத் தோடும் அக்கறையோடும் அணுக வேண்டும். இசை, ஓவியம், நடனம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களையும் விருப்போடு தான் கற்க வேண்டும்.

மகிழ்நெறிக்கு உரியதாகவும் மன அழுத்தங்களிலி ருந்து விடுதலை தருவதாகவும் இசை அமைகின்றது.



கற்பனா சக்தியை அதிகரிக்கின்ற அமிர்த சஞ்சீவினியாக வும் மிளிர்கின்றது. பாடுகின்ற போது அழுத்தங்களிலி ருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு திரும்ப உடலியக்க மும் சீராகின்றது. மாணவர்களை உள நெருக்கீடுகளிலி ருந்து ஆற்றுப்படுத்தி ஞாபக சக்தியினையும் அதிகரிக் கின்றது. “இசை உணர்ச்சி நிலைகளுடன் தொடர் புடையது. இசைத்துண்டுகள் வாழ்வின் மகிழ் தருணங் களை நினைவு படுத்துகின்றன.” என சீன் லூசி குறிப்பிடு கின்றார்.

அங்க அசைவுகளூடாக மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றலைக் கொண்டதாக நடனம் அமைகின்றது. இந்திய நடனக் கலையானது சிவனோடு தொடர் புபட்டதாக நோக்கப்ப்டுவதால் தெய்வீக கலை யாகவும் கருதப்படுகின்றது. நடனமானது மாண வர்களின் உளத்தையும் உடலையும் சீர்படுத்துவ தோடு மகிழ்ச்சியையும் பெருகச் செய்கின்றது. நடன ஒப்பனைகளும், அணிகலன்களும் வசீகரிக் கும் தன்மையோடுஅமைகின்றன. மாணவர்கள் கூட்டாகச் செயற்படும் பண்பால் குழு ஒருமைப் பாட்டினையும் வளர்க்கின்றது. கூட்டுக் கலை யாக அமையும் பிறிதொரு பாடமாக நாடகமும் அரங்கியலும் அமைந்துள்ளது. ஆற்றுகையினை வெளிப்படுத்தும் மாணவர்கள் ஒன்றிணைவதால் குழுமனப்பாங்கு கட்டியெழுப்பப்படுகின்றது.

பன்முகப் பாத்திர முன் வைப்பால் தனிநபர் ஆளுமை குறித்த புரிதல் சாத்தியமா கின்றது. “உலகமே ஒரு நாடக மேடை” என்ற சேக்ஸ் பியரின் கூற்று எளிதில் புரி கின்றது. அச்ச உணர்வும், தாழ்வு மனப்பாங்கும் அகலிக் கின்றன. உச்சரிப்புத்திறன் விருத்தியடைகின்றது. தனி மை நாட்டத்தைப் போக்கி, தோழமை உணர்வினை கட்டியெழுப்பி விடுகின்றது.

மொழி கடந்த பிறிதொரு கலை வடிவமாக ஓவியம் காணப்படுகின்றது. முன்னர் குறிப்பிட்ட அழகியற் கலை களின் தொன்மங்களைக் கூட குகை ஓவியங்களின் வழியே தரிசித்துள்ளோம். புத்தாக்கத் திறனையும் பொறுமையினை யும் கட்டியெழுப்ப வல்ல, கலையாகும். நேர்த்தியினை யும் ஞாபகத்தினையும் அதிகரிக்க வைக்கிறது. குறி யீட்டறிவும் நிறக்கலவையையும் நுண்ணறிவினை விருத்தி செய்கின்றன.

நேர முகாமைத்துவத்தோடு செயலாற்ற வழிப்படுத் துகின்றது. அழகியற்பாடங்கள் மென்திறன்களை வளர்த் தெடுக்கும் பண்போடு திகழ்கின்றன என்பன வெளிப் படையானதாகும். அகிலமயமாக்கலானது மென்திறன் விருத்தியினை கட்டியெழுப்ப எத்தனிக்கிறது. மாறு கின்ற உலகின் போக்கிற்கு அமைய மாணவர்களும் மாற்றங்காண வேண்டியது அவசியமானது. எனவே அழகியற் பாடங்களை வேணவாவோடு அணுகி வெற்றி காண்பது முக்கியமானதாகும். ■

## அவற்றோரன்ன.. இவற்றோரன்ன..

# சர்தார் உத்தம்:

## எதிரியின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புதல்



பேராசிரியர் அ.ராமசாமி

**எழுத்தும் காட்சியும்**

16 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் குழுமம் என்ற பெயரில் இந்தியாவிற்குள் நுழைந்து, அப்போதைய வணிகர்களையும் சிற்றரசர்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின் பிரிட்டானிய அரச நிர்வாகத்திடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுச் சுரண்டல் சாம்ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள். விரிவுபட்டபோது, இன்றைய இந்தியா மட்டுமல்லாமல், தனித்தனி நாடுகளாக இருக்கும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளும் அடங்கிய ஒரு மாபெரும் பரப்பைக் கொண்டிருந்தது. அந்தப் பரப்பிலிருந்த மக்கள் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்பதை உணர்ந்து போராடத் தொடங்கிய காலகட்டம் பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதிதான்.

அடிமைப்பட்ட வரலாறும் விடுதலைப்போராட்ட வரலாறும் எழுத்துகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவையெல்லாம் படித்த மக்களுக்கானவை. ஆனால் திரள் மக்களுக்கானவைகளாக இருப்பவை கலை, இலக்கிய வெளிப்பாடுகளே. கலை இலக்கியங்களில் புனைகதைகளும் கூட ஒருவிதத்தில் படித்தவர்களுக்கானவையே. ஆனால் நிகழ்த்துக்கலை வடிவமான நாடகங்களும், காட்சிக்கலைவடிவமான திரைப்படங்களும் திரள் மக்களுக்கானவை. அவையே ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களைச் சென்றடையும் தன்மை கொண்டவை. இதனைப் புரிந்துகொண்ட நிலையில்தான் விடுதலைப் போராட்ட நிகழ்வுகளும் வரலாறும் நாடகங்களாகவும் திரைப்படங்களாகவும் தொடர்ந்து எடுக்கப்பட்டன. விடுதலைப் போராட்டம் முடிந்து போன நிலையிலும் அவற்றை மையமிட்ட சினிமாக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அதன் வழியாக அடிமைப்பட்ட காலத்தில் பட்ட துயரங்களும், போராடிய முறைகளும் திரும்பவும் காட்டப்படுகின்றன. கடந்த காலத்தின் நினைவுகள் நிகழ்காலத்திற்கான பாதைகளாக மாறும் என்ற நம்பிக்கை அதன் பின்னே இருக்கின்றன.

முதல் இந்திய விடுதலைப்போர் எனச் சொல்லப்படும் சிப்பாய்க்கலகம் (1857) தொடங்கி, இந்திய விடுதலை நாளான 1947 ஆகஸ்ட் 15 வரையிலான தொண்ணூறாண்டுகால இந்திய விடுதலைப் போராட்டம் பல்வேறுவிதமான நாடகங்களாகவும் சினிமாக்களாகவும் வந்துள்ளன. போராட்டக்காலத்தில் எடுக்கப்பட்ட ஆவணப்படங்களாக மட்டுமல்லாமல் பல்வேறு வகையான புனைவுப் படங்களும் வந்துள்ளன. தமிழில் வீரபாண்டியகட்டப்பொம்மன், சிவகங்கைச் சீமை, கப்பலோட்டிய தமிழன், கொடிகாத்த குமரன், பாரதி போன்றன சில புனைவுப்படங்கள். அவை குறிப்பான ஆளுமைகளின் வாழ்க்கை வரலாற்றைப் புனைவாக்கிச் சொன்னவை. அவற்றிலிருந்து மாறுபட்ட ஒரு சினிமா கமல் ஹாசனின் ஹேராம். காந்தியின் கொலைக்கான காரணங்களைத் தேடிச்சென்ற அப்படம் அதன் சொல்முறையிலிருந்த சிக்கல்களால் அதிகம் கவனிக்கப்படாத சினிமாவாகவும் பேசப்படாத படமாகவும் நின்று போனது. இவையல்லாமல் இந்திய மொழிகள் பலவற்றில் விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை மையப்படுத்திய படங்களும் வந்துள்ளன. அண்மையில் சர்தார் உத்தம் (இணைய வெளி வெளியீடு: 2021 அக்டோபர் 2). இந்திய விடுதலைப் போராட்டப் பின்னணியில் பலவகையிலும் விவாதிக்க வேண்டிய படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**வெட்டியெடுக்கப்பட்ட வாழ்க்கை**

சர்தார் உத்தம், இந்தியப் போராட்டத் தலைவர்களில் ஒருவரல்ல. அவரது வாழ்க்கை வரலாற்றை முழுமையாகச் சொல்லும் படமாகவும் இந்தச் சினிமா எடுக்கப்படவில்லை. உத்தம்சிங்கின் கடைசி இருபதாண்டுக் கால வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்வுகளால் பின்னப்பட்டுள்ள திரைப்படம், ஜாலியன் வாலா பாக் நிகழ்விற்குக் காரணமான அதிகாரியைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டவர் என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது. உத்தம் சிங் போன்றவர்களின் வரலாறு அறியப்படாமல் போனதற்கு, அவர் தேர்ந்தெடுத்த பழிக்குப்பழி என்ற நோக்கமும் ஆயுதப்போராட்ட வழிமுறையும் காரணமாக இருக்கலாம். அகிம்சை வழியால் – காந்தியின் ஒத்துழையாமை இயக்கப் போராட்ட முறைகளால் மட்டுமே இந்தியா விடுதலை பெற்றது என்று சொல்லப்பட்டுள்ள வரலாற்றிற்குப் பின்னால் பகத்சிங், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் போன்ற ஆயுதப்போராட்ட வீரர்கள் பங்களிப்புகள் முழுமையாகச் சொல்லப்படும் வாய்ப்புகள் குறைவுதான்.

உத்தம்சிங், பகத்சிங்கின் வழியைப் பின்பற்றியவர். பஞ்சாபில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் நடத்திய வன்முறையான ஒடுக்குமுறையை எதிர்கொள்ள வன்முறையே வழி என நம்பியவர். அதனைச் செயல்படுத்தும் நோக்கத்தோடு வேறு பெயர்களில் ஐரோப்பாவுக்குச் சென்று, சோவியத் ரஷ்யாவில் செயல்பட்ட புரட்சியாளர்களோடு நட்பு ஏற்படுத்திக் கொண்டு ஆயுதப் பயிற்சி பெற்றவர். உத்தம்சிங்கின் வாழ்க்கை வரலாற்றில் உள்ள இந்தத்தகவல்களை மையமிட்டே திரைக்கதை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஜாலியன் வாலாபாக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான பொறுப்பை ஜெனரல் டயர் என்ற ராணுவத்தளபதியிடம் ஒப்படைத்த பஞ்சாப் ஆளுநர் ஓ பிரையனைச் சுட்டுக்கொல்வதில் தொடங்கும் படம், விசாரணையின் போது சொல்லப்படும் பதில்களைக் காட்சிப்படுத்துவதின் வழியாக விரிகிறது.

சர்தார் உத்தமின் வாழ்க்கையைச் சொல்வதைவிடவும் ஜாலியன் வாலாபாக் நிகழ்வின் பெருந்துயரத்தைப் பார்வையாளர்களிடம் கடத்துவதை தீவிரமாகச் செய்துள்ள படம் இரண்டுவிதமான நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. இந்திய விடுதலை என்பது அகிம்சை வழியில் மட்டுமே பெறப்பட்டதல்ல என்பதைச் சொல்வதை முதன்மையாகச் சொல்கிறது. அதன் பின்னால் பகத் சிங் போன்ற சோசலிஸ்டுகளின் சிந்தனைகளின் வழி தூண்டப்பட்ட மக்கள் திரளின் அடங்காத போராட்டங்களும், உயிர்த்தியாகங்களும் இருந்தன என்பதைப் பேசுகிறது. இரண்டாவதாகக் கொலைகாரத் திட்டங்கள் மூலம் மக்கள் திரளின் கோபம் அடக்கப்பட்டாலும் உக்கம் சந்த் போன்ற இளைஞர்களின் கோபம் அடங்காமல் கனன்று கொண்டிருந்தது. அந்தக் கோபத்தின் நீட்சி பழிவாங்கும் நோக்கமல்ல விடுதலை வேட்கை என்பதையும் சொல்கிறது. அதனை உணர்த்தும் காட்சிகளாக லண்டனில் நடக்கும் காட்சிகளும் நீதிமன்றக் காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**துன்பியல் காட்சியின் இலக்குகள்**

படத்தில் நீண்ட நிகழ்வாக விரிக்கப்பட்டுள்ள காட்சி ஜாலியான்வாலிபாக் நிகழ்வு. இந்திய விடுதலைப்போரில் 1919, ஏப்ரல் 13 அன்று நடந்த உண்மை நிகழ்வு. அதனைப் படமாக்கும்போது, தனிக்காட்சி என்ற நிலையைத் தாண்டி அதற்குள்ளேயே ஓரங்க நாடகம் ஒன்றிற்கான தொடக்கம், உச்சம், முடிவு என்ற கட்டமைப்பில் படமாக்கப்பட்டுள்ளது. அக்கட்டமைப்பின் மூலம் அப்பயங்கர நிகழ்வு தற்செயலாக நடந்த நிகழ்வல்ல திட்டமிட்ட அரச பயங்கரவாதச் செயல் என்பதைக் காட்டுவதோடு, பார்வையாளர்களின் மனதில் அழிக்கமுடியாத உணர்வலைகளை எழுப்பித் தக்க வைக்கிறது. இந்தக் காட்சியைத் திட்டமிட்டதும், படமாக்கியதும் தொகுத்ததும், பின்னணி இசைக்கோர்வைகளைச் சேர்த்ததும் இயக்குநரின் திரைப்படக்கலை மீதான நம்பிக்கையையும் தேர்ச்சியையும் காட்டியுள்ளது.

பிரிட்டானிய ஆளுகைக்குட்பட்ட இந்திய மாநிலங்களில் ஒன்றான பஞ்சாபின் அமிர்தசரஸில் கூடித் தங்களுக்கு விடுதலை வேண்டும், சமத்துவம் வேண்டும், தங்கள் கருத்துகளை எடுத்துரைக்கும் பேச்சுச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்ட கூட்டத்தினரை (20000) இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை ஈவிரக்கமில்லாமல் சுட்டுக்கொன்ற நிகழ்வு நீண்டநேரக்காட்சியாக விரிக்கப்பட்டுள்ளது. பஞ்சாப் ஆளுநர் ஓ பிரையனின் அழைப்பை ஏற்று வந்த ராணுவ அதிகாரி ஜெனரல் டயர் போட்டுத்தரும் திட்டம் ஓரங்க நாடகத்தின் ஆரம்பம். போராட்டக்காரர்கள் சுற்றிவளைக்கப்படுவதும். மைதானம் நகர்த்தப்பட்டு ஒருவரையும் தப்பிக்கவிடாமல் சுட்டுக்கொல்வதும் நாடகத்தின் உச்சம். மொத்தக் கொலைகளும் முடிந்தபின் உத்தம் சிங் வந்து உயிரோடு இருப்பவர்களில் தனது காதலியைத் தேடுவதும், துன்பியல் நாடகத்தின் வீழ்ச்சியை நோக்கிய பயணம். அத்துன்பியல் காட்சிகளைப் பார்வையாளர்களுக்குக் கடத்துவதற்குப் பெரும் துணையாக இருப்பன, படத்தில் உருவாக்கப்பட்டுள்ள மௌனங்களும் மெல்லோசைகளுமே. இடைவிடாத துப்பாக்கி ஓசைக்குப்பின் பிணக்காடாகக் காட்சி அளிக்கும் மைதானத்தில் நிலவுவது முழுமையான மௌனம். பிறகு கேட்கும் விசும்பல்களும் மூச்சொலிகளும் முணகல்களும் அசையும் சில உருவங்களின் உடல்களும் சேர்ந்து, துயரத்தின் உச்சநிலைக்குப் பார்வையாளர்களைக் கொண்டு செல்கின்றன.

உயிர்பிரியும் வேளையில் தண்ணீர் குடிக்க நினைத்துத் தாகத்தை வெளிப்படுத்தும் உடல்களும், அவற்றை இரும்பு வண்டியில் வைத்துத்தள்ளிக் கொண்டுபோய்ச் சேர்க்கும் மருத்துவமனைக்காட்சிகளும் கணவனைத் தேடிவரும் மனைவியின் நிலையும் மனதை உருக்கும் காட்சிகள்.

ஒரு நபரின் வாழ்க்கைக் கதையை விடுதலைப் போரின் பகுதியாக மாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட திரைக்கதை உருவாக்கமும், அவற்றை அடுக்கி உருவாக்கியிருக்கும் சொல்முறையும், படப்பிடிப்பில் காட்டியிருக்கும் காட்சிப்படுத்தலும் பாத்திரங்களை ஏற்று நடித்திருக்கும் நடிகர்களின் ஈடுபாடும், இசைக்கலவைகளும் சேர்ந்து சர்தார் உத்தம் படத்தைப் புகழ்பெற்ற விடுதலைப் போராட்டப் படமான ஒமர் முக்தாரின் காட்சிகளோடு இணைத்து வைக்கத் தூண்டுகின்றன. பாலைவனச் சிங்கம் ஒமர் முக்தாரின் தீரத்தைக் காட்டியதைப் போலவே உத்தமின் நீதிமன்றக்காட்சிகள் வெளிப்பட்டுள்ளன. விடுதலைப் போராட்ட சினிமாக்கள் என்ற வகைப்பாட்டில் ஒரு செவ்வியல் படத்தை உருவாக்கியுள்ள இயக்குநர் சுபேந்து பட்டாச்சார்யாவின் திரைப்படக்குழு சில முன்மாதிரிகளை உருவாக்கியிருக்கிறது.




**பின் குறிப்பாக ஒரு எண்ணவோட்டம்**

20000 பேரை ஒரே இடத்தில் திரட்டிக் கொலை செய்த ஜெனரல் டயரின் திட்டமிட்ட ராணுவ நடவடிக்கைகளைப் பார்த்து முடித்தபோது ஈழப்போரின் கடைசி நிகழ்வாக முடிந்துபோன முள்ளிவாய்க்கால் காட்சிகளை எழுதிய பல புனைவுகள் நினைவுக்கு வந்தன. ஈழப்போருக்குப் பின் கவிதைவரிகளாகவும் சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் விவரிக்கப்பட்ட காட்சிகளில் உருவாக்கப்பட்ட உணர்வுகள் பெரும்பாலும் ஒருவிதக் கையறுநிலை வெளிப்பாடுகளே. பெரும்பாலும் ஈழத்தமிழ் வாசகர்களையும் இந்தியத்தமிழர்களையும் நோக்கிப் பேசிய சொல்முறைமைகளைக் கொண்டவை. அதன் மூலம் பேரழிவின் துயரத்தை முன்வைத்துக் கழிவிரக்கத்தை உண்டாக்கும் நோக்கம் கொண்டவைகளாக எழுதப்பெற்றவை. அப்பிரதிகளின் ஏதாவதொன்றில் அடிப்படையில் ஒரு சினிமா உருவாக்கப்படும் நிலையில் உத்தம் சிங் படம் கையாண்டுள்ள மாதிரியைப் பின்பற்றலாம் என்று பரிந்துரைக்கத் தோன்றுகிறது. அதன் மூலம் பார்வையாளர்களிடம் அழிக்க முடியாத உணர்வுகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியும். அத்தோடு அப்பெருந்துயரங்களை ஏற்படுத்திய எதிரிகளின் மனதில் குற்றவுணர்வை உண்டாக்கி மன்னிப்புக் கோரலைச் செய்ய முடியும். சிங்களப் பெருஞ்சமூகமும் அவற்றின் அடையாளமாக இருக்கும் அதிகாரத்துவ மனிதர்களும் பேரழிவுகளை உணர்ந்து மன்னிப்புக்கோரும் நிலையில் புதிய நம்பிக்கைகளும் விடியல்களும் கண்ணுக்குத் தெரிய வாய்ப்புண்டு. ■

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## நமக்குள்ளே நம்முடன் வாழும் நண்பர்களும் பகைவர்களும்

அன்பு மகிழ்ச்சி தரும் ஒருணர்வு. தரவும் பெறவும் நிறைவு தருகின்ற ஒரு விடயம் உண்டெண்றால் அது நாம் பிறர் மீது செலுத்தும் அன்பும் பிறர் நம் மீது காட்டும் அன்புதான் ஒரு கணம் நாம் நம்முள்ளே பயணித்து உள்ளுலக உணர்வுகளின் போக்கை அவதானிப்போம் எனின் யாராவது எம்மீது தமது அன்பினை மெய்யான பாசத்தை வெளிக்காட்டும் போது நம்முள்ளே பூவாய் விரிகின்ற ஒரு நல்லுணர்வின் திருப்தியின் விருகாசிப்பு உள்ளோடி நிறைவதையும் அறிந்து கொள்ள முடியும்.

அன்பெனும் இனிய உள்ளுணர்வை அடுத்தவர்கள் மீது நாம் காட்ட முன் வருகையில் ஒரு உள்ளார்ந்த நிலையும் அடுத்தவரின், அந்த நேரத்து உள்மன ஓட்டத்தையும் விளங்கிக் கொண்டு ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் எமக்குத் தேவைப்படுகிறது. நான் அன்பின் வினாவாய் இவ்விதம் நடந்து கொள்ள முற்படுகையில் அவர் எனது மனநிலையைப் புரிந்து கொள்கிறாரில்லையே என அவசரப்பட்டு திடீர் முடிவுக்கு வருவதும் அவசரத்தில் வார்த்தைகளைக் கொட்ட முற்படுவதும் எமது அன்பை இயல்பாய்த் தூண்டும் எமது உள்ளார்ந்த சகிப்புத் தன்மையும் புரிதலுமே எமது அன்பை அவருக்கு உணர்த்த முடியும். அதே போதில் அன்புடையோர் நீடித்த பொறுமையும் சாந்தமும் உடையவராய் நடந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். அதன் மூலமே நமது உள்ளத்து நல்லன்பின் ஆழத்தை அடுத்தவர் உணர முடியும்- மாறா நாம் எமது அதிகார ஆணவ உணர்வுடன் அடுத்தவரைக் கையாள முற்படும் போது நாம் தோல்லி அடைந்து போகிறோம்.

நாம் ஆற்றக்கூடிய பல நல்ல செயல்களின் ஈடேற்றத்துக்குத் தடையாய் பல சந்தர்ப்பங்களில் விளங்குவது தம்மிடம் நிலை கொண்டிருக்கும் “நான்” எனும் உணர்வு தான் வயது காரணமாய், பதவி நிலை காரணமாய், உறவு நிலை காரணமாய் நாமே கற்பித்துக் கொண்ட உயர்நிலைப் பற்றிய உணர்வால் பல சந்தர்ப்பங்களில் அன்பு காட்ட விரும்பியும் அதனை செயலாக்க முடியாமல் போவதுண்டு. நிதானமாய் பிறரைப் புரிந்து கொள்வது உறவைப் பேணும் செயற்பாட்டில் மிக மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. யாரேனும் எமது நன்நோக்கத்தை விளங்கிக் கொள்ளத் தவறிப் போய் எம்மை அலட்சியம் செய்ய முற்படும் திசையில் எமக்குக் கோபம் ஏற்படுவதுண்டு. அத்தகைய இடத்தில்தான் நாம் நமது மனதையும் நாவையும் எமது நல்லறிவின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டியவராய் இருக்கிறோம் - தவறி, நாம் எமது அற்பமான கோபத்திற்கு இரையாகி எல்லாவற்றையும் கொட்டிச்சிதறி விடுவோமெனில் எமது உள்ளத்தின் ஒரு நல்ல பண்பை செயற்படுத்த முடியாமல் எம்மிடமே நாம் தோற்றுப் போகும் துயர்நிலை சில சமயங்களில் சம்பவிப்பதுண்டு.

பலருக்கும் பல சந்தர்ப்பங்களில் சம்பவித்துப் போகும் நிலை தான் தம்மிடமே தாம் தோற்றுப் போய் முன்னிருந்த ஒரு நல்ல செயலில் நடைமுறைப்படுத்த முடியாமல் போகும் நிலை தோன்றுவதுண்டு. அதைத்தான் அடுத்தவர் மீதான பரிவு, அவர்களின் அறியாமையை மன்னிக்கும் பெருந்தன்மை மனித பொது இயல்பு பற்றி புரிதல் எனும் இயல்புகளை உடையோராய் இருக்க முனையும் போதுதான் நாம் அடிப்படை நல்லறிவோடு எப்போதும் வாழ்பவர்களாய் விளங்க முடியும். அன்பு காட்டுதல் போல அன்பை உணர்வதும் ஒரு பேரனுபவமாகும். உள்ளம் நிறைந்து வார்த்தைகளால் வடிவு பெறும் அன்பு வெளிப்படும் சந்தர்ப்பமும் வார்த்தைகளே இல்லா மௌனப் பெருக்கினூடாய் உணரப்படும். அன்பும் அர்த்தம் நிறைந்தவை. உலகத்துப் பெருங் காவியங்கள் பலவற்றில் ஊற்றுவாயாக விரும்பியது நாம் அனைவருமே உள் மகிழும் அன்பெனும் இன்னுணர்வின்றி வேறேன்ன? ■

---

## 13 ஆவது திருத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பது தொடர்பாகவும், தமிழரசுக் கட்சியை இணைக்காமை தொடர்பாகவும் பல விமர்சனங்கள் வந்திருக்கின்றன. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கைத் தீவில் அரசியல் தரப்புக்கள் ஒருமித்த சக்தியாக ஒருங்கிணைவது வரவேற்கத்தக்கது. ஆனால் தமிழ் தேசத்ளதிற்கான அரசியல் தீர்வுத் திட்டம் என்பது பரிகார நீதியின் அடிப்படையில் பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலமே காணப்படல் வேண்டும். 2009 இன அழிப்புக்கு முன்னராக முன்வைக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்திலான அரசியல் தீர்வு தமிழ்த் தேசத்தின் பெரு விருப்பாக அமையவில்லை என அன்றே அரசியல் தலைவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். எனவே அரசியல் தீர்வு 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று பரிகார நீதியின்படி அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தது. சில இணையத்தளங்கள் இக்கலந்துரையாடலில் ஈடுபட்டவர்களை இந்திய - மேற்குலக நாட்டின் கைக்கூலிகள் என வர்ணித்திருந்தன. யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று தமிழரசுக்கட்சி இணைக்காமையைக் குற்றம் சாட்டியிருந்தது. ரெலோ இவ்விவகாரத்தில் அவசரப்பட்டது ஏன் எனவும் கேள்வி எழும்பியிருந்தது.

இந்த விமர்சனங்கள் மனோகணேசனை சற்றுக் கோபப்படுத்தியிருந்தன. வடக்கை மையமாகக் கொண்டு வடக்கு - கிழக்கு அரசியல் பரப்பு விசித்திரமானது என்பதை மீண்டும் ஒரு முறை அறிந்து சிலிர்த்துக் கொண்டேன். நான் என்னை நம்பும் மக்களுக்கு கைக்கூலி தான். 13 ஆவது திருத்தத்தை முழுமையான தீர்வு என எம்மில் எவரும் கருதவில்லை. சமஸ்டித் தீர்வினை பெற தமிழர்களுக்கு முழுமையான சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. அதனைப் போராடிப் பெற வேண்டும். உலகம் துணைப் பாத்திரத்தை தான் வகிக்க முடியும். வெளியில் இருந்து எவரும் வந்து தட்டில் வைத்து தீர்வு தரப்போகிறார்களா? எனக்கூறியிருக்கிறார்.

மனோ கணேசனின் இந்தக் கருத்துகளுடன் 13 ஆவது திருத்தம் பற்றிய விவாதம் மீண்டும் மேல் நிலைக்கு வந்துள்ளது. அது அரசியல் தீர்வின் ஆரம்பப்புள்ளியாக இருக்குமா? இதற்குப் பின்னால் இந்தியத்தரப்பின் நோக்கம் என்ன? என்கின்ற விடயங்கள் விவாதப் பொருட்களாகியுள்ளன. 13 ஆவது திருத்தம் ஆரம்பப்புள்ளியாக இருக்கும் என்பது தமிழ் மக்களில் அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொள்ளவில்லை. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அதனைக் கடுமையாக எதிர்க்கின்றது. பொது அமைப்புக்களும் பல எதிர்க்கின்றன. புலம்பெயர் அமைப்புக்களில் பலவும் எதிர்க்கின்றன.

13 ஆவது திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு சுயாதீனமான இருப்பு எதுவும் இல்லை. பிடுங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் எஞ்சியிருக்கின்றன. அதிகாரங்கள் ஆளுநரிடம் இருக்கிறதே ஒழிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபைகளிடமோ, அமைச்சரவையிடமோ இல்லை. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் ஒரு மாநகர சபைக்குள்ள சுயாதீன அதிகாரங்கள் கூட மாகாண சபைகளுக்கு இல்லை என்றே கூறலாம்.

எனவே எந்த அதிகாரமும் இல்லாத ஒன்றை எவ்வாறு ஆரம்பப்புள்ளியாகக் கொள்ள முடியும். இது மனோகணேசனுக்கு தெரியாததல்ல. கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய கட்சியினருக்கும் தெரியாததல்ல. இங்கு மாகாண சபைகளிடம் சில அதிகாரங்கள் இருக்கின்றன. அவை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது தான் பிரச்சினை என்ற கருத்து முன்வைக்க முயற்சிக்கப்படுகிறது இது தவறானதாகும்.

இரண்டாவது தமிழ்க்கட்சிகள் ஆரம்பப்புள்ளி எனக் கூறினாலும் இந்தியாவினதும், மேற்குலகத்தினதும் கருத்து அவ்வாறானதல்ல. அவை நிரந்தரத் தீர்வாகவே நிலைநிறுத்த முயற்சிக்கின்றன. 13 ஆவது திருத்த முன்னெடுப்புக்களிலுள்ள மிகப் பெரிய அபாயம் இதுதான்.

தவிர மாகாணசபை முறையினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் கொஞ்சநஞ்சமல்ல. மேலே குறிப்பிட்டது போல் தமிழ் அரசியலின் இலக்கான சுயநிர்ணயமுடைய சமஸ்டி நோக்கிச் செல்வதை தடுக்கின்ற பெருந் தடுப்புக் கட்டையாக மாகாண சபை முறை உள்ளது. இது முதலாவது பாதிப்பு.

இரண்டாவது தமிழ்த் தேசியத்தின் இருப்பை இது சிதைக்க முற்படுவதாகும். கிழக்கு மாகாண சபை விவகாரத்தில் இதனை தெளிவாகக் காணலாம். அங்கு கிழக்கு மாகாண சபையை எவ்வாறாவது கைப்பற்ற வேண்டும் என்பதற்கு சிங்களக் கட்சிகளுடன் கூட்டுச் சேருவதற்கும் ஒரு தரப்பு தயாராக இருக்கின்றது. அதற்காக வடக்கு-கிழக்கு இணைப்பை அடக்கி வாசிப்பதற்கும் தயாராக இருக்கின்றது. கிழக்கின் முக்கியஸ்தர்கள் இக் கட்டுரையாளரிடம் இதனை நேரடியாக தெரிவித்துள்ளனர். இந்தப் போக்கை முன்னெடுப்பதற்காக பிரதேசவாதமும், வடக்கு எதிர்ப்பு வாதமும் அங்கு கிளப்பப்படுகின்றது. இந்தப் போக்கு கிழக்கு தமிழ் மக்களை பெருந்தேசியவாதத்திற்குள் கரைப்பதை நோக்கியே நிலைமையை இழுத்துச் செல்லும். கோட்டபாய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலும் இதுதான். வரப்போகும் மாகாண சபைத் தேர்தலில் இதனை அரங்கேற்றும் நிகழ்ச்சித்திட்டம் பசில்ராஜபக்ஷ தலைமையில் இலாவகமாக முன்னெடுக்கப்படுகின்றது.

மாகாண சபை முறையிலுள்ள ஒரே ஒரு சாதகமான அம்சம் வடமாகாணசபை ஒரு அரசியல் களமாக இருக்கின்றது என்பது தான். இதனை இக்கட்டுரையாளர் முன்னரும் கூறியிருக்கின்றார். போர் நடைபெற்ற பிரதேசம் என்பதால் வடமாகாணசபை எப்போதும் சர்வதேச கவனிப்புக்கும் உள்ளாக்கப்படுகின்றது.

இங்கு ஒரு இராஜதந்திர பிரச்சினை இருக்கின்றது என்பதை இக்கட்டுரையாளர் மறுக்கவில்லை. இந்தியாவிற்கு மாகாணசபை இயங்க வேண்டியது தேவையாக உள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை உயிருடன் வைத்திருப்பதற்கு இது மிக அவசியம். புதிய யாப்பு முயற்சிகள் மாகாணசபை முறையை இல்லாது செய்து விடலாம். அவ்வாறு நடைபெற்றால் தனது பிடி இல்லாமல் போகும் என இந்தியா அஞ்சுகின்றது.

இந்த இராஜதந்திர நெருக்கடிக்காக “இந்தியாவின் ஒருங்கிணைந்து குரல் கொடுங்கள்” என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஆரம்பப் புள்ளியாக இருக்கும் என்ற பொய்க்கதையாடலை விட்டு அவிட்டுவிடாமல் இருப்பது தமிழ்த் தேசத்திற்கு நல்லது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கூட்டத்தின் சாதகமான அம்சங்கள் இரண்டாகும். ஒன்று ரவூப்ஹக்கீம் தலைமையில் இடம் பெற்றதும், ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றதுமாகும். இதன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு நாம் இணைந்து செயற்பட எப்போதும் தயார் என்கின்ற வலிமையான செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. முஸ்லிம்-தமிழ் உரையாடலை ஏதோ ஒருபுள்ளியில் ஆரம்பிக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமாக உள்ளது. அதற்கான முதற் காலடி வைக்கப்பட்டிருக்கின்றது எனலாம். வடக்கு-கிழக்கு தாயக அரசியலுக்குள் முஸ்லிம் தரப்பும் வருமானால் இணைந்த வடக்கு-கிழக்கிற்கு ரவூப்ஹக்கீம் முதலமைச்சராவதைக் கூட தமிழ் மக்கள் எதிர்க்கப்போவதில்லை இங்கு தமிழ்த் தேசியத்திற்குள் முஸ்லிம் மக்கள் கரைய வேண்டும் எனக் கூற வரவில்லை. அவர்கள் ஒரு தேசிய இனமாகவே இணைந்து கொள்ளலாம். இணைந்த வடக்கு கிழக்கில் அவர்களுக்கான தனி அதிகார அலகுக் கோரிக்கையைக் கூட தமிழ் மக்கள் எதிர்க்கப் போவதில்லை.

இரண்டாவது, சாதகமான அம்சம் காணிப்பறிப்பு, ஒரே நாடு ஒரே சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகள் விடுதலை என்பன பற்றியும் ஒரே குரலில் பேசியமையாகும். எதிர்காலத்தில் இதனை மேலும் வளர்த்தெடுக்கலாம். தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் சந்திக்கின்ற பொதுவான பிரச்சினைகளிலும், தனியான பிரச்சினைகளிலும், இணைந்து குரல் கொடுப்பது அழுத்தங்கள் வலிமையாக வருவதற்கு உதவக்கூடியதாக இருக்கும்.

மொத்தத்தில் யாழ்ப்பாணக் கூட்டம் பற்றி பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் தமிழ்-முஸ்லிம் உறவு, ஒருங்கிணைந்த குரல் என்பவற்றில் “காத்திரமான முதல் காலடி” வைக்கப்பட்டிருக்கின்றது எனக் கூறலாம்.

மலையக மக்கள் சம்பந்தமான கோரிக்கைகள் தீர்மானங்களில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அதனைப் பற்றியும் கவனம் செலுத்துவது அவசியமானது. ■

# மெய்நிகர் உலகிற்கு வரும் தொடு உணர்வு!

‘விர்சுவல் ரியாலிட்டி’ என்ற மெய்நிகர் தொழில்நுட்பம் பெரும்பாலும் காட்சி சார்ந்ததாகவே இருக்கிறது. மெய்நிகர் காட்சிக் கருவியை கண்ணுக்கு அணிந்து கொண்டால், ஒரு கிராபிக்ஸ் உலகத்தைக் கண்டு ரசிக்கலாம். அதில் நடக்கலாம், பொருட்களை நகர்த்தலாம். ஆனால், தொடு உணர்வு இருக்காது.


சென்ஸ்குளோவ் நோவா உருவாக்கியுள்ள கையுறை, அந்தக் குறையை போக்க இருக்கிறது. மெய்நிகர் கருவியை அணிந்துகொண்டு, சென்ஸ் குளோவ் கையுறையையும் அணிந்து கொண்டால், மெய்நிகரில் தெரியும். எதைத் தொட்டாலும் அதை தொடும் உணர்வை இந்தக் கையுறைகள் தரும். அதுமட்டுமல்ல, பொருட்களை கையாளும்போது அவற்றின் மேற்பரப்பின் சொரசொரப்பு அல்லது வழுவழுப்பு முதல், எதிர்விசை போன்றவற்றையும் இக் கையுறை மூலம் அணிந்தவரால் உணர முடியும்.



மின்னணு கம்பிகள் மற்றும் பருத்தி இழைகளைக் கலந்து தயாரிக்கப்பட்ட, ‘ஸ்மார்ட் டெக்ஸ்டைல்’ துணிகளால் சென்ஸ்குளோவ் கையுறைகள் தயாராகின்றன. கணினி மற்றும் மெய்நிகற் மென்பொருள்களால் இயக்கப்படும் இந்தக் கையுறைகளுக்கு, கம்பிகளால் அழுத்தம், அசைவு போன்ற தொடு உணர்வுகள் கடத்தப்படுவதாக சென்ஸ்குளோவ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரியில் அறிமுகமான சென்ஸ்குளோவ், தற்போது விற்பனைக் கட்டத்தை எட்டியுள்ளது. மெய்நிகர் விளையாட்டு, புதிய தொழிற் பயிற்சித் துறை மற்றும் ராணுவம் போன்ற துறையினர் இந்த உணர்ச்சி தரும் கையுறையை வாங்க ஆர்வம் காட்டியுள்ளனர்.





# தன் வினை தன்னைச் சுடும்

ஒரு காட்டில் குள்ள நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு அழகிய முயல் ஒன்று நண்பனாக இருந்தது. தந்திரம் உள்ள அந்தக் குள்ளநரி தனக்கு ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளிலும் முயலை மாட்டி விட்டுத் தான் தப்பி விடும். இதை நன்கு அறிந்த முயலும் நண்பன் என்ற காரணத்தால் எப்பொழுதும் குள்ளநரிக்கு உதவுவதுண்டு.

ஒரு நாள் பக்கத்து காட்டில் இருந்த சிங்கம் ஒன்று குள்ளநரியை கண்டு அதை சாப்பிட நினைத்தது. அதை அறிந்த குள்ளநரி சிங்கத்திடம் இருந்து ஓடித் தப்பி விட முடியாது, தந்திரமாகப் பேசித்தான் தப்ப முடியும் என்று சிங்கத்திடம் தானாகவே அருகில் சென்று சொன்னது. “சிங்க ராஜாவே உங்களை எங்கள் காட்டிற்கு வரவேற்கிறேன். உங்களுக்கு விருந்து வைக்க விரும்புகிறேன் சிறிது நேரத்தில் உங்களுக்கான உணவு வந்துவிடும்” என்று முயலை மாட்டிவிட நினைத்தது. தன் நண்பனைத் தேடி வந்த முயலோ குள்ளநரி சிங்கத்தோடு பேசிக்கொண்டிருப்பதை அறிந்து மிகவும் மனம் வருந்தி அந்தக் காட்டை விட்டே வெளியேறியது. என் விருந்து இன்னமும் வரவில்லை குள்ளநரி என்னை ஏமாற்றுகிறது என்று நினைத்து குள்ளநரியை சாப்பிட்டு விட்டது சிங்கம்.

**நிக்ஷித்**



## தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தந்தை சொல் மிக புனிதமானது
தட்டினால் தவிப்பு நம்மை சேரும்

**கி.கிருஷன்**
**யா/ஹாட்லிக் கல்லூரி**
**8A**






# விடுகதைகள்

1. ஓங்கி வளர்ந்ததும் ஒரு பக்கம் சாய்ந்து போனான்?
   **மூங்கில் மரம்**
2. மண்ணுக்குள்ளே இருக்குதாம் வெள்ளிக்கட்டி?
   **முள்ளங்கி**
3. தச்சர் செய்யாத கதவு, தானே திறக்கும், தானே மூடிக் கொள்ளும்?
   **கண் இமை**
4. மாப்பிள்ளை என்னவோ பளபளாதான், வழவழா தான். ஆனால் வயிற்றால்தான் நடப்பார் இந்த மாப்பிள்ளை?
   **பாம்பு**
5. இந்தக் கடைக்கு வார விடுமுறை என்பது கிடையவே கிடையாது?
   **சாக்கடை**
6. இந்த நீர் கடலிலும் கலக்காது... இதை யாராலும் குடிக்கவும் முடியாது?
   **கண்ணீர்**
7. இந்தக் காவலாளி வீட்டிலேயே இருப்பான். இவனது கூட்டாளி மட்டும் அடிக்கடி வெளியே சுற்றச் சென்று விடுவான்?
   **பூட்டு, சாவி**
8. பூமியில் பிறந்து, புகையாக மாறி மேலே போகும்?
   **பெட்ரோல்**
9. அழகான வெள்ளை மாளிகை. உள்ளே போகத் தான் வாசலும் இல்லை, ஜன்னலும் இல்லை?
   **முட்டை**
10. இதைத் தொட்டுப் பார்க்கத்தான் முடியும். எட்டிக் கூடப் பார்க்க முடியாது?
   **முதுகு**
11. தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?
   **மீன் வலை**

## சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

# ‘உறக்க நலன் காக்கும் படுக்கை!’




உடற்பயிற்சிக்குப் பலவகை கருவிகள் வந்துவிட்டன. ஆனால், உறக்கத்திற்கு அப்படி எதுவும் கருவிகள் இல்லை. இருப்பதெல்லாம் படுக்கைதான். எனவே, படுக்கையையே அதி உயர் தொழில்நுட்பக் கருவியாக ஆக்கியிருக்கிறது ‘எய்ட் ஸ்லீப்’ (Eight Sleep).

சராசரியாக மனிதனுக்கு எட்டுமணி நேர உறக்கம் தேவை என்ற அறிவியல் உண்மையின் அடிப்படை யில் வைக்கப்பட்ட பெயர் இது.

எய்ட் ஸ்லீப், ஒரு புத்திசாலிப் படுக்கை. இதில் ஆறு அடுக்குகள் உண்டு. அதில் ஒன்று நீரை அடைத்திருக்கக்கூடியது. படுக்கையை வெது வெதுப்பாக அல்லது குளிர்ச்சியாக வைத்திருக்க ஒரு செயற்கை நுண்ணறிவு மென்பொருள் உதவுகிறது. படுத்திருப்பவரின் உடல்வாகிற்கு ஏற்ப படுக்கையை மாற்றுகிறது.

இந்தப் படுக்கையில் படுப்பவர், 40 சதவீதம் சீக்கிரமே தூங்குவார். அதே போல, இடையில் விழிப்பது 30 சதவீதம் குறையும். புரண்டு படுப்பதும் 30 சதவீதம் குறையும். எப்படியும், எய்ட் ஸ்லீப் படுக்கை, நிம்மதியான தூக்கத்திற்கு வழிவகுக்கும் என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

# அசுத்த நீரைக் குடிநீராக மாற்றும் ஜெல்!

தூய்மையான குடிநீருக்குத் தட்டுப்பாடு உள்ள பகுதிகள் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் உள்ளன. அப்பகுதிகளில் இருப்போருக்கு வரமாக வந்திருக்கிறது ஒரு தொழில்நுட்பம்.

அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கிய இது, ஒரு ஹைட்ரோஜெல் மாத்திரை வடிவில் உள்ளது. இதை அசுத்த நீரில் போட்டால், ஒரு மணி நேரத்தில் கரைந்து, அந்த நீரில் உள்ள கிருமிகள் 99.99 சதவீதம் கொன்றுவிடுகிறது. மேலும் அதில் வேறு எந்தப் பக்க விளைவுகளும், கசடுகளும் இருக்காது என்பதால், அந்த நீரைக் குடிப்பதற்கு ஏற்றதாக மாற்றி விடுகிறது.

மாத்திரை வடிவில் இருக்கும் ஹைட்ரோஜெல், நீரில் ஊறியதும் ஹைட்ர ஜன் பெராக்சைடை வெளியேற்றுகிறது. இது, கிருமிகளை உடனடியாகக் கொல்லும். இதைத் தவிர வேறு எந்த வேதி வினைகளையும் அது வெளியிடாது என்பதால், அந்த வில்லையை வெளியே எடுத்து வீசி விடலாம். இந்த முறைக்கு மின்சாரமோ, எரிபொருளோ தேவையில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 13.11.2021 அன்று வெளியிடப்பட்டது.